www.surabooks.com

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 11ஆம் வகுப்பு

6 இயல்கள் கொண்ட புதிய பதிப்பு

### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- நம்மை அளப்போம் பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம் என அந்தந்த பகுதிகளில் புத்தக வினா என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் கூடுதலாக விடைகளுடன் உள்ளே தரப்பட்டுள்ளன.
- கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள் ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து பயிற்சிகளுக்கும் முழுமையான விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018 (அ.மா.வி.), முதல் பருவ இடைத்தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2018, 2019, 2023, & 2024, அரையாண்டுத் தேர்வு 2018, 2019, 2023 & 2024, அரசுத் தேர்வு மார்ச் 2020, அரசுத் துணைத்தேர்வு செப்டம்பர் 2020 & 2021, திருப்புதல் பொதுத் தேர்வு 2022 மற்றும் அரசு பொதுத்தேர்வு – மே 2022, உடனடித் தேர்வு – ஆகஸ்டு 2022, அரசு பொதுத் தேர்வு – மார்ச் 2023, 2024 & 2025 மற்றும் உடனடித் தேர்வு – ஜூன் 2023, ஜூலை 2024 மற்றும் முதல் திருப்புதல் தேர்வு 2024 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- சுராவின் இரண்டு மாதிரி வினாத்தாள்கள் புதிய பாடநூலின்படி (குறைக்கப்பட்ட இயல்) இணைக்கப்பட்டுள்ளன.
- அரசு பொதுத்தேர்வு – மார்ச் 2025 வினாத்தாள் விடைகளுடன் தரப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG 145

எழுதி வழங்கியவர்கள்
கி. லதா, M.A., B.Ed., M.Phil.,
கவிஞர். மாத்தூர். அ.ச.சேகர், M.A., B.Ed.,

## Our Guides for Std XI - XII

### Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

### XII - Std - Question Banks :

- சுராவின் தமிழ்
- Sura's English
- Sura's Mathematics (EM / TM)
- Sura's Physics (EM / TM)
- Sura's Chemistry (EM / TM)
- Sura's Biology (EM / TM)
- Sura's Computer Science (EM / TM)
- Sura's Economics (EM / TM)
- Sura's Commerce (EM / TM)
- Sura's Accountancy (EM / TM)

தலைமை அலுவலகம்
சுரா பப்ளிகேஷன்ஸ்
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

4/06/2025

# பதிப்பாசிரியர் உரை

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** மேல்நிலை – முதலாம் ஆண்டு வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளன.

நம்மை அளப்போம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம் ஆகியவை தரப்பட்டுள்ளன. கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

அரசு பொதுத் தேர்வுக்கான புதிய மதிப்பீட்டு முறையில் 100 மதிப்பெண்கள் வடிவமைப்பில், 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வின் வினாத்தாள் அடிப்படையில் நமது வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளதால், தேர்வுகளை மிகச் சரியான விதத்தில் எதிர்கொள்ளலாம்.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

*மாணவச் செல்வங்களே...*

குறிப்பு:

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும். கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், பெட்டிச் செய்தி, நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம்.
- அணி, திணை, துறைகளுக்கான வினாக்களுக்கு விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றை தவிர்க்காமல் படிக்க வேண்டும். ஒரு மதிப்பெண் வினாக்களை நன்றாகப் படித்தால் குறுவினா, சிறுவினா, நெடுவினா தேர்வு எழுதும்போது உங்களுக்கு கைக்கொடுக்கும்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.

**படித்ததை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்.**
**ஆழ்ந்து படியுங்கள்! வெற்றி உங்களுக்கே!!**



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| மனப்பாடச் செய்யுள் | | | 1-2 | ஜூன் |
| 1. | மொழி, கலை **என்னுயிர் என்பேன்** | * யுகத்தின் பாடல் **(செய்யுள்)** | 3-38 | |
| | | பேச்சுமொழியும் கவிதை மொழியும் **(உரைநடை)** | | |
| | | ஒவ்வொரு புல்லையும் **(செய்யுள்)** | | |
| | | இசைத்தமிழர் இருவர் **(துணைப்பாடம்)** | | |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் **(இலக்கணம்)** | | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் **மாமழை போற்றுதும்** | இயற்கை வேளாண்மை **(உரைநடை)** | 39-100 | ஜூலை |
| | | ஐங்குறுநூறு **(செய்யுள்)** | | |
| | | மனோன்மணீயம் **(செய்யுள்)** | | |
| | | யானை டாக்டர் **(துணைப்பாடம்)** | | |
| | | புணர்ச்சி விதிகள் **(இலக்கணம்)** | | |
| | | * திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 3. | பண்பாடு **பீடு பெற நில்** | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு **(உரைநடை)** | 101-138 | ஆகஸ்டு |
| | | காவடிச்சிந்து **(செய்யுள்)** | | |
| | | * குறுந்தொகை **(செய்யுள்)** | | |
| | | வாடிவாசல் **(துணைப்பாடம்)** | | |
| | | பகுபத உறுப்புகள் **(இலக்கணம்)** | | |
| 4. | கல்வி, அழகியல், மனிதம் **கேடில் விழுச்செல்வம்** | தமிழ்நாட்டுக் கல்வி வரலாறு **(உரைநடை)** | 139-184 | அக்டோபர் |
| | | பிள்ளைக்கூடம் **(செய்யுள்)** | | |
| | | * தொலைந்து போனவர்கள் **(செய்யுள்)** | | |
| | | ஒரே நண்பன் **(துணைப்பாடம்)** | | |
| | | கலைச்சொல்லாக்கம் **(இலக்கணம்)** | | |
| | | * திருக்குறள் **(வாழ்வியல்)** | | |




enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை **நாளெல்லாம் வினைசெய்** | ஆனந்தரங்கர் நாள்குறிப்பு **(உரைநடை)** | 185-224 | **நவம்பர்** |
| | | சீறாப்புராணம் **(செய்யுள்)** | | |
| | | பதிற்றுப்பத்து **(செய்யுள்)** | | |
| | | செவ்வி **(துணைப்பாடம்)** | | |
| | | ஆக்கப்பெயர்கள் **(இலக்கணம்)** | | |
| 6. | நாடு, அரசு, சமூகம், நிருவாகம் **வையத் தலைமை கொள்** | காற்றில் கலந்த பேரோசை **(உரைநடை)** | 225-258 | **டிசம்பர்** |
| | | * புரட்சிக்கவி **(செய்யுள்)** | | |
| | | அதிசயமலர் **(செய்யுள்)** | | |
| | | அயல்நாட்டவரின் அருந்தமிழ்ப் பணி **(துணைப்பாடம்)** | | |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக, வல்லின மெய்களை நீக்கி எழுதுக, வல்லின மெய்களை இட்டு எழுதுக, வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுக, மரபுப் பிழையை நீக்கி எழுதுக, மரபுச்சொற்களை சொற்றொடரில் அமைத்து எழுதுதல், விடைக்கேற்ற வினா அமைத்தல், நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக, மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக, உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க, பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுக, ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | 259-290 | |
| சுராவின் இரண்டு மாதிரி வினாத்தாள்கள் (குறைக்கப்பட்ட இயல்) | | | 291-298 | |
| அரசு பொதுத்தேர்வு – மார்ச் 2025 வினாத்தாள் விடைகளுடன் | | | 299-306 | |


* **குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி.**



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **36550290536** |
| Bank Name | : | **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : | Padi |
| IFSC | : | SBIN0005083 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **21000210001240** |
| Bank Name | : | **UCO BANK** |
| Bank Branch | : | Anna Nagar West |
| IFSC | : | UCBA0002100 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **6502699356** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| Bank Branch | : | Asiad Colony |
| IFSC | : | IDIB000A098 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **1154135000017684** |
| Bank Name | : | **KVB BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | KVBL0001154 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **13240200032412** |
| Bank Name | : | **FEDERAL BANK** |
| Bank Branch | : | Anna Nagar |
| IFSC | : | FDRL0001324 |

| | | |
|---|---|---|
| A/c Name | : | **Sura Publications** |
| Our A/c No. | : | **50200031530945** |
| Bank Name | : | **HDFC BANK** |
| Bank Branch | : | Cenotaph Road, Teynampet |
| IFSC | : | HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044-4862 9977, 044-4862 7755.
**Mobile :** 96001 75757 / 81242 01000 / 81243 01000.
**Email :** orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

# மனப்பாடச் செய்யுள்

## இயல் - 1 யுகத்தின் பாடல்

அ.மா.வி 2018

காலாண்டு, அரை. தேர்வு 2019, தி.தேர்வு 2022; ஜூன் 2023

ஏடு தொடக்கிவைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த
விரல் முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின்சுவரெலாம் எழுதத்தான்வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

– சு.வில்வரத்தினம்

## இயல் - 2 திருக்குறள்

**அடக்கமுடைமை**

2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. காலாண்டுத் தேர்வு 2019

**ஒப்புரவறிதல்**

4. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

அரை.தேர்வு 2019 & 2023

**புகழ்**

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

கா.தேர்வு 2018, தி.தேர்வு 2022; ஜூன் 2023, மு.தி.தேர்வு 2024

**நிலையாமை** மார்ச் 2024

13. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**துறவு**

15. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். காலாண்டுத் தேர்வு 2024

16. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

19. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

அ.மா.வி 2018, கா.தேர்வு 2023, அரை.தேர்வு 2024, மார்ச் 2025

22. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். ஜூன் 2019

**காலமறிதல்**

24. ஞாலம் கருதினும் கைகூடும் காலம் ஆகஸ்டு 2022
கருதி இடத்தால் செயின்.

## இயல் - 3 குறுந்தொகை

மு.ப.இ.தேர்வு,2018, கா.தேர்வு 2018, அ.தேர்வு2023, மார்ச் 2023

ஜூலை 2024

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

– வெள்ளி வீதியார்

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

## இயல் - 4 தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

‘நான்’ என்பாய் அது நீயில்லை – வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

– அப்துல் ரகுமான்

பா வகை : சிந்து

## இயல் - 4 திருக்குறள்

**குறிப்பறிதல்**

3. குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். ஜூலை 2024

www.surabooks.com



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**பகைத்திறம் தெளிதல்**

7. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

8. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

அரையாண்டுத் தேர்வு 2018, மார்ச் 2019, செப். 2021

**மருந்து**

9. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். செப். 2020

10. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். மார்ச் 2020, 23

**இரவச்சம்** மே 2022

13. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

– திருவள்ளுவர்

---

**இயல் - 6**

## புரட்சிக்கவி

**சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு**
**தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்**
**நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?**
**கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்**
**கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?**
**பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்**
**போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?**

பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

– பாரதிதாசன்

★ ★ ★



www.surabooks.com

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி, கலை

# யுகத்தின் பாடல்

- சு.வில்வரத்தினம் கவிதைப்பேழை

## கரு



✳ மனித இனத்தின் முதல் அடையாளம் மொழி. மொழி என்பது இணைப்புக் கருவியாகும். மொழி பண்பாட்டின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.

✳ ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவது மொழியே. மனிதனின் இருப்பை அடையாளப்படுத்துவது மொழியே. தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்று வரை பல தடைகளைக் கடந்து உலகின் உயர்தனிச் செம்மொழியாக ஓங்கி நிற்கிறது.

✳ கடல்கோள், கரையான், மூடப்பழக்கவழக்கம், போர் போன்றவற்றைக் கடந்து, யுகம் (காலம்) கடந்து செம்மாந்து நிற்கின்ற தமிழின் சிறப்பைக் கவிஞர் பாடுகிறார்.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | சு. வில்வரத்தினம் |
| ஊர் | : | யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில் பிறந்தவர். |
| காலம் | : | 1950 - 2006 |
| | : | இலங்கையைச் சேர்ந்த தமிழர். சு.வி. என்ற பெயரால் அறியப்படுவர்.<br>இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்த்தெழும் காலத்துக்காக' எனும் தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன. இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். |

## நூற் குறிப்பு

சு. வில்வரத்தினம் இயற்றிய 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற கவிதைத் தொகுதியில் இருந்து இரண்டு கவிதைகளில் தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## பாடல்

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 1. என் அம்மை, ஒற்றியெடுத்த<br>நெற்றிமண் அழகே!<br>வழிவழி நினதடி தொழுதவர்,<br>உழுதவர், விதைத்தவர்,<br>வியர்த்தவர்க்கெல்லாம்<br>நிறைமணி தந்தவளே!<br>உனக்குப்<br>பல்லாண்டு<br>பல்லாண்டு<br>பல்லாயிரத்தாண்டு | என் அன்னை பூமித்தாய், பூமித் தாயின் நெற்றி மண் அழகு. பூமித்தாயின் திருவடிகளைக் காலம் காலமாக தொழுகின்றனர். தொழுது வருகின்றனர்.<br>உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் எல்லாருக்கும் நிறைந்த பொருள்களை அள்ளித் தந்தவள் நம் பூமித்தாய்.<br>அதாவது தமிழ்ப்பற்றாளர், புலவர்கள், தமிழுக்குத் தொண்டு செய்த வள்ளல்கள், மன்னர்கள் ஆகியோருக்குப் புகழையும் நற்பேற்றையும் தந்தவள் தமிழன்னை.<br>அவளுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நாம் பல்லாண்டு பாட வேண்டும். |
| 2. பாடத்தான் வேண்டும்!<br>காற்றிலேறிக்<br>கனைகடலை, நெருப்பாற்றை,<br>மலைமுகடுகளைக் கடந்து<br>செல் எனச் செல்லுமோர் பாடலை<br>கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்<br>காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்<br>உரமெலாம் சேரப்<br>பாடத்தான் வேண்டும்! | பாடத்தான் வேண்டும்! காற்றில் ஏறி, கனைகடலை, நெருப்பாற்றை மலை முகடுகளைக் கடந்து. அதாவது முதல் சங்கம் நடந்த கடல்கொண்ட மதுரையிலும், இரண்டாம் சங்கம் நடந்த கபாடபுரத்திலும் தோன்றிய நூல்கள், கடல்கோளால் அழிந்துவிட்டாலும் காலத்தால் அழியாது இன்று வரை நிலைத்து நிற்கிறது.<br>தொல் கனிமங்களின் உரமெலாம் என்றது – தொன்மையான நூல்கள் எல்லாம் அழியாமல் ஆற்றலுடன் சிறப்பாக விளங்கும் தமிழை வலிமையோடு பாடத்தான் வேண்டும். |



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

| | |
|---|---|
| **ஏடு தொடக்கி வைத்து என்னம்மை<br>மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த<br>விரல்முனையைத் தீயிலே தோய்த்து<br>திசைகளின் சுவரெலாம்<br>எழுதத்தான் வேண்டும்<br>எழுகின்ற யுகத்தினோர் பாடலை.**<br>– சு.வில்வரத்தினம் | ஏடு தொடக்கி வைத்து என் தாய் மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த விரல் முனையைத் தீயிலே தோய்த்து எண் திசைகளின் சுவரெல்லாம் (அதாவது ஆற்று மணலில் எழுதி விரலால் எழுதி கற்றோம். அந்த விரல் முனையால் இனி ஆற்றல் கொண்டு அழியாத வண்ணம் எல்லா திசைகளிலும் எல்லா மொழிகளிலும் தமிழின் சிறப்பை எழுதி சேர்ப்போம்)<br>'எழுதத்தான் வேண்டும் எழுகின்ற யுகத்தினோர்' பாடலை என் தாய் மொழியின் பெருமையை எல்லாத் திசைகளிலும் பரவச் செய்ய நாம் தாய் மண்ணின் புகழைப் பல்லாண்டு வாழ்த்துப்பாட வேண்டும். |

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. அம்மை – தாய் | 8. கனைகடல் – ஒலிக்கின்ற கடல் |
| 2. நினதடி – உனது பாதம் | 9. பல்லாண்டு – பல ஆண்டுகள், திருப்பல்லாண்டு பாசுரம் |
| 3. முகடு – உச்சி | 10. கபாடபுரம் – இரண்டாம் தமிழ்ச்சங்கம் நடைபெற்ற இடம் |
| 4. தீட்டித் தீட்டி – வண்ணம் தீட்டி | 11. யுகம் – வயது, காலம், காலத்தை அளக்கும் அலகு. |
| 5. விரல் முனை – விரல் நுனி | 12. நிறைமணி – மிகுதியான புகழ், செல்வம் |
| 6. தோய்த்து – தொட்டு, நனைத்து | 13. தொல் கனிமங்கள் – மறைமுகமான பொருள் சங்க இலக்கியங்கள் |
| 7. நெற்றி மண் – திருநீரு | 14. தொழுதவர், உழுதவர், விதைத்தவர் – மன்னர், புலவர், வள்ளல்கள் |

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. வழி வழி, தீட்டித் தீட்டி | அடுக்குத்தொடர்கள் |
| 2. தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் | வினையாலணையும் பெயர்கள் |
| 3. நிறைமணி, கனைகடல் | வினைத்தொகைகள் |
| 4. சாகாத | எதிர்மறை பெயரெச்சம் |
| 5. மாநகர், கூர்வேல், உறுமீன் | உரிச்சொற்றொடர்கள் |
| 6. சுவரெலாம் | சுவரெல்லாம் என்பதன் இடைக்குறை |
| 7. உரமெலாம் | உரமெல்லாம் என்பதன் இடைக்குறை |
| 8. வைத்து, கடந்து | வினையெச்சங்கள் |

## பகுபத உறுப்பிலக்கணம்

| | | |
|---|---|---|
| **தீட்டி – தீட்டு + இ** | **எழுகின்ற – எழு + கின்று + அ** | **நின்ற – நில் (ன்) + ற் + அ** |
| தீட்டு – பகுதி | எழு – பகுதி | நில் – பகுதி |
| இ – வினையெச்ச விகுதி | கின்று – நிகழ்கால இடைநிலை | (ன்) – 'ல்', 'ன்' ஆகத் திரிந்தது விகாரம் |
| | அ – பெயரெச்ச விகுதி | ற் – இறந்த கால இடைநிலை |
| | | அ – பெயரெச்ச விகுதி |

## அறிக

| | |
|---|---|
| கிருதயுகம் – 17,28,000 ஆண்டுகள் | திரேதாயுகம் – 12,96,000 ஆண்டுகள் |
| துவாபரயுகம் – 8,64,000 ஆண்டுகள் | கலியுகம் – 4,32,000 ஆண்டுகள் |


enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**புணர்ச்சி விதிகள் :**

1. **ஒற்றியெடுத்த = ஒற்றி + எடுத்த**

விதி 1 : 'இ, ஈ, ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி உடம்படுமெய் பெற்றது. ஒற்றி + ய் + எடுத்த என நிற்கும்.

விதி 2 : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி ஒற்றி+(ய்+எ)டுத்த= ஒற்றியெடுத்த என்றானது.

2. **பல்லாண்டு = பல் + ஆண்டு**

விதி 1 : 'தனிக் குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' பல்+ல்+ஆண்டு என நிற்கும்.

விதி 2 : 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' பல்+(ல்+ஆ)ண்டு = பல்லாண்டு எனப் புணரும்.

3. **காற்றிலேறி = காற்றில் + ஏறி**

விதி 1 : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ல்+ஏ = லே, காற்றி+(ல்+ஏ)றி= காற்றிலேறி எனப் புணரும்.

4. **உரமெலாம் = உரம் + எலாம்**

விதி 1 : 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி நிலைமொழியின் ஈற்று மெய்(ம்)யும் வருமொழியின் முதலெழுத்தான உயிரும் (எ) சேர்ந்து (ம்+எ = மெ) உரமெலாம் எனப் புணரும்.

5. **சுவரெலாம் = சுவர் + எலாம்**

விதி 1 : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி. நிலைமொழியின் ஈற்று மெய்(ர்)யும் வருமொழியின் முதலெழுத்தான உயிரும் (எ) சேர்ந்து ர்+எ = றெ) சுவரெலாம் எனப் புணரும்.

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

**பலவுள் தெரிக**

காலாண்டுத் தேர்வு 2019 & 2024; தி.தேர்வு 2022

2. **''கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்'' - அடி மோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

**விடை: இ) கபாடபுரங்களை - காலத்தால்**

**குறுவினா**

காலாண்டுத் தேர்வு 2023

2. **என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்,
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே! - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எடுத்து எழுதுக.**

காலாண்டுத் தேர்வு 2019

வினையாலணையும் பெயர்கள்:

(i) தொழுதவர் (ii) உழுதவர் (iii) விதைத்தவர் (iv) வியர்த்தவர்

5. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

கா.தேர்வு 2019, அரை.தேர்வு 2019, 2023,2024; தி.தேர்வு; ஆகஸ்டு 2022; மார்ச், ஜூன் 2023

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார்.

**சிறுவினா**

அ.தேர்வு 2019, 2024, தி.தேர்வு 2022, மார்ச் 2023, 2025, கா.தேர்வு 2023 & 2024

**1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

என் அன்னையே! தலை ஒற்றியெடுத்தபோது நெற்றியில் படிந்த மண்ணின் அழகே! வழிவழியாக உன் திருவடிகளைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைமணி தந்தவளே! உனக்குப் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்.

தொன்மையான கபாடபுரம் போன்ற நிலப்பரப்புகளைப் பலி கொண்ட பிறகும் ஒலிக்கின்ற கடலையும், நெருப்பாற்றையும், மலை உச்சிகளையும் காற்றிலே ஏறிக் கடந்து தமிழைச் செல்லுமாறு கட்டளை இடுகின்ற பாடலைப் பாடத்தான் வேண்டும். மேலும் காலத்தால் அழிவில்லாத தொன்மையான செல்வங்களின் வலிமை சேருமாறு பாடத்தான் வேண்டும் என்று கவிஞர் சு. வில்வரத்தினம் தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடுகிறார்.

## கற்பவை கற்றபின்

**1. தாய்மொழியே முதன்மையானது – இக்கூற்றுக் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

சந்தோஷ் : வணக்கம். அசோக், ஆனந்த், சம்பத் எப்படி இருக்கிறீர்கள்?
மூவரும் : வணக்கம். நாங்கள் நலம், நீங்கள்?
சந்தோஷ் : நானும் நலம்.
சம்பத் : இந்த உலகத்திலே மிகவும் தொன்மையான மொழி எது?
அசோக் : அதுவா!... நம்முடைய தாய்மொழி தமிழ்தான்.
ஆனந்த் : எந்த மொழியில் கல்வி கற்க சுலபம்.
சந்தோஷ் : நம்முடைய தாய்மொழியில்தான்.
சம்பத் : ஏன்?
அசோக் : ஏனென்றால், தாய்மொழியில் கல்வி கற்றால் எளிதில் புரிந்து கொண்டு வெற்றிப் பெற முடியும். பிறமொழியில் கல்வி கற்றால் புரியாது. கடினமாக இருக்கும். வெற்றி என்பது கேள்விக்குறியே!...
ஆனந்த் : அப்படியா!...
சந்தோஷ் : தாயும், தாய்மொழியும் ஒன்று. இதை நம்மிடம் இருந்து பிரிக்க முடியாது.
ஆனந்த் : உண்மைதான்.
சம்பத் : தாய் பேசுகின்ற மொழியே! எல்லோருக்கும் தாய்மொழி எனப்படும்.
ஆனந்த் : குழந்தை முதன்முதலில் பேசுகின்ற மொழி தாயின் மொழி ஆகும்.
சந்தோஷ் : ஒரு மனிதனுக்குத் தாய் பேசுகின்ற மொழி முதன்மையான மொழி அதுவே தாய்மொழி.
ஆனந்த் : தாய்மொழி எல்லோருக்கும் முதன்மையானது. ஏனென்றால் முதலில் பேசுகின்ற மொழி எளிதில் புரிந்து கொள்கிற மொழி எளிதில் கல்வி கற்க உதவுகின்ற மொழியே 'தாய்மொழி' அதுவே முதன்மையானதாகும்.
சந்தோஷ் : நன்றி, வணக்கம்.

**2. 'காலத்தை வென்ற மொழி' என்னும் தலைப்பில் கவிதை படைக்க.**

('காலத்தை வென்ற மொழி' நம் தாய்மொழி தமிழ் மொழியே. இதனை வளர்த்ததும் வளர்ந்ததும் நம்நாடே! நம் தமிழ்மொழியே! இதனை மையமாக வைத்து ஒரு பாடலை இங்கு கண்டு கேட்டு உண்டு மகிழ்வோம். இன்பத் தேனை அள்ளிப் பருகுவோம்.)

தமிழினம்! செந்தமிழைத் தழைக்க வைப்பது நம்மினமே!
    தமிழினமே! வந்தாரை வாழ வைக்கும் தங்கத் தமிழ்நாடு!
முதல் மனிதன் தோன்றிய இடம்
    நம் குமரிக் கண்டமே! அவன் பேசிய
அமுத மொழி செந்தமிழே!
    தெலுங்கு மலையாளம் கன்னடம்
எனும் சேய்க்குத் தாயாக இருந்த மொழி
    நம் தமிழல்லவா! தமிழை வளர்ப்பது தமிழர்

தம் கடமையல்லவா! இயல் இசை நாடகம்
எனும் முத்தமிழை வளர்த்த நாடு நம்தாய்
நாடல்லவா! நம் தமிழ் நாடல்லவா!
தமிழர் தம் வாழ்வியலுக்கு அகம் புறம் என
வகுத்தவன் நம் தமிழனல்லவா! அவனை வளர்த்த
பெருமை நம் நாடல்லவா! நம் தமிழ்
நாடல்லவா! எட்டுத் தொகை பத்துப்பாட்டு
நம் தமிழ் இலக்கியமே!

அகத்தியம் தொல்காப்பியம் நம் தமிழிலக்கணமே!
இதனை வகுத்துப் பகுத்துக் கொடுத்தவன் தமிழினமே!
அவனை வாழ வைத்தது நம் நாடல்லவா!
உயர் சிந்தனை முகிழ்த்தது நம் தமிழினமே!
உயர் சிந்தனையாளர் வாழ்ந்தது நம் தமிழ்நாடே!
யாதும் ஊரே யாவரும் கேளிர்! எனும் ஒருமைப்பாட்டை
விதைவிதைத்தவன் நம் தமிழனே!
அவனை வாழ வைத்தது நம் தமிழ்நாடே!

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. விதைத்தவர் என்பதன் இலக்கணக்குறிப்பு ............** காலாண்டுத் தேர்வு 2019

அ) உரிச்சொல் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

**விடை: ஆ) வினையாலணையும் பெயர்**

**2. 'தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை' என்று பாடியவர்.............** செப்.2021

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) இரசூல் கம்சதோவ் ஈ) சு.வில்வரத்தினம்

**விடை: இ) இரசூல் கம்சதோவ்**

**3. மனித இனத்தின் ஆதி அடையாளம் :** ஜூன் 2023

அ) எழுத்து ஆ) பேச்சு இ) மொழி ஈ) பாட்டு

**விடை: இ) மொழி**

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. 'எழுகின்ற' இச்சொல்லைப் பிரிக்கும் முறை ...........**

அ) எழு + இன் + ற ஆ) எழு + கின்ற இ) எழுந்த+கின்று+அ ஈ) எழு+கின்று+அ

**2. கவிஞர் சு.வில்வரத்தினம் பிறந்த நாடு ...........**

அ) மலேசியா ஆ) இலங்கை இ) இந்தியா ஈ) சிங்கப்பூர்

**3. ''உயிர்த்தெழும் காலத்துக்காக'' என்ற கவிதைத் தொகுதி ........................ல் தொகுக்கப்பட்டது.**

அ) 2001 ஆ) 2003 இ) 2002 ஈ) 1991

**4. மனித இனத்தின் முதல் அடையாளமாக விளங்குவது ........................**

அ) அறிவு ஆ) பண்பாடு இ) கலை ஈ) மொழி

**5. ஒரு இனத்தின் மைய இயக்கமாக விளங்குவது ...............**

அ) கலாச்சாரம் ஆ) இசை இ) மொழி ஈ) தொழில்

**6. புதுக்கவிதை – குறித்த கூற்றுகளுள் சரியானதைத் தேர்க.**

i) மரபு சார்ந்த செய்யுள்களின் யாப்புக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது.
ii) படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத் தன்மை கொண்டது.
iii) படிப்போரின் ஆழ்மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
iv) எளியவர்களும் தன் உணர்ச்சிகளைக் கவிதைவாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தருவது.

அ) (i), (ii) மற்றும் (iv) ஆ) (i), (ii) மட்டும் இ) அனைத்தும் ஈ) (i), (iii), (iv) மட்டும்

**7. ''பாடத்தான் வேண்டும்'' காற்றிலேறிக் கனைகடலை, நெருப்பாற்றை – இவ்வடிகளில் அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) எதுவுமில்லை

**8. 'உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும்' – இவ்வடியில் 'உரம்' என்ற சொல்லின் பொருள்............**

அ) வேதிப்பொருள் ஆ) வலிமை இ) உரசுதல் ஈ) உயரம்



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com

**9. கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்**
**காலத்தால் சாகாத தொல் கனிமங்களின் - இவ்வடிகளில் வெளிப்படும் நயங்களைச் சுட்டுக.**

அ) அடிமோனை - சீர்மோனை
ஆ) அடிமோனை - சீர் எதுகை
இ) அடி எதுகை - சீர் எதுகை
ஈ) சீர் எதுகை - சீர் மோனை

**10. பொருத்துக.**

அ) தீட்டித் தீட்டி - 1. வினையெச்சம்
ஆ) உழுதவர் - 2. உரமெல்லாம் என்பதன் இடைக்குறை
இ) உரமெலாம் - 3. வினையாலணையும் பெயர்
ஈ) தொடக்கி - 4. அடுக்குத் தொடர்

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 3, 4, 1

விடைகள் :
1. ஈ) எழு+கின்று+அ
2. ஆ) இலங்கை
3. அ) 2001
4. ஈ) மொழி
5. இ மொழி
6. இ அனைத்தும்
7. அ) வினைத்தொகை
8. ஆ) வலிமை
9. அ) அடி மோனை- சீர் மோனை
10. அ) 4, 3, 2, 1

## குறுவினா

**1. மனித இனத்தின் அடையாளம் எது?**
மனித இனத்தின் ஆதி அடையாளமாகக் கருதப்படுவது மொழியே ஆகும்.

**2. தமிழ் உயர் தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது எவ்வாறு?**
நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்றைய காலம் வரையும் இடர் பல களைந்து, உயர் தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது.

**3. ''கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்**
**காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்'' - விளக்கம் தருக.**
முதல் சங்கம் நடந்த கடல்கொண்ட மதுரையிலும், இரண்டாம் சங்கம் நடந்த கபாடபுரத்திலும் தோன்றிய நூல்கள், கடல்கோளால் அழிந்துவிட்டாலும் காலத்தால் அழியாது இன்று வரை நிலைத்து நிற்கிறது.

## சிறுவினா

**1. சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?**

(i) என் தமிழ் அன்னை தொட்டு எடுத்த நெற்றி திலகம் அழகானது.
(ii) காலங்காலமாக தமிழ் அன்னையை தொழுத மன்னர்களுக்கும், புலவர்களுக்கும், வள்ளல்களுக்கும் மற்றும் தமிழ் தொண்டாளர்களுக்கும் பெரும்புகழைத் தந்தவள்.
(iii) இவ்வாறு சான்றோர்களால் வளர்க்கப்பட்ட தமிழ் அன்னையே! நீ பல ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும். இலக்கியச் செல்வங்கள் நிறைந்த தமிழே! நீ பல ஆண்டுகள் வாழ வேண்டும் என சு.வில்வரத்தினம் வாழ்த்தியது தமிழ்த்தாய்க்கு முற்றிலும் பொருந்தும்.

**2. கவிஞர் சு.வில்வரத்தினம் - குறிப்பு எழுதுக.**

(i) சு.வி. என்ற பெயரால் அறியப்படும் கவிஞர் சு. வில்வரத்தினம் 1950 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர்.
(ii) இவருடைய கவிதைகள் மொத்தமாக 'உயிர்த்தெழும் காலத்துக்காக' என்ற தலைப்பில் 2001 இல் வெளியானது. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்டவர். தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார்.
(iii) தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் 'நாட்டுப்பற்றாளர் விருது' வழங்கி சிறப்பிக்கப்பட்டார். **அகங்களும் முகங்களும், காற்று வெளிக் கிராமம், காலத்துயர், நெற்றி மண், உயிர்த்தெழும் காலத்துக்காக, வாசிகம்** ஆகிய கவிதைத் தொகுதி நூல்களை இயற்றியுள்ளார்.
(iv) சு.வில்வரத்தினம் அவர்கள் 9.12.2006 இல் கொழும்பில் இயற்கை எய்தினார்.

**3. மொழி - விளக்குக.**

(i) மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளம். பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.
(ii) ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே.
(iii) அது நம் இருப்பின் அடையாளமாகவும் விளங்குகிறது.

☆☆☆



www.surabooks.com

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி, கலை

# பேச்சுமொழியும் கவிதைமொழியும்

- இந்திரன் உரைநடை உலகம்

## கரு

* கலைகளின் உச்சமாக விளங்குவது கவிதை. அக்கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மக்களுக்கு ஓர் எழுத்தாளன் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதியார்.
* கவிதை எவ்வாறு நிகழ்கிறது, எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது..

## ஆசிரியர் குறிப்பு

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்டவர் இந்திரன். இவர் சிறந்த கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர். ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரியமொழிக் கவிஞரான மனோரமா பிஸ்வாலின் **"பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்"** என்னும் நூலின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின் விருது** பெற்றார். கவிதை நூல்கள் சில, **முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள்,** கட்டுரை நூல்கள் சில, **தமிழ் அழகியல், நவீன ஓவியம்,** நடத்திய இதழ்கள் **நுண்கலை, வெளிச்சம்.**

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள் :**

- வால்ட்விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ.ஶ்ரீராம்
- பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.**

அ) மல்லார்மே – யுகத்தின் பாடல்
ஆ) இன்குலாப் – ஒவ்வொரு புல்லையும்
இ) ஸ்டெஃபான் மல்லார்மே – புல்லின் இதழ்கள்
ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதை மொழியும்

அ) அ, ஆ  ஆ) அ, ஈ  இ) ஆ, ஈ  ஈ) அ, இ

**விடை: இ) ஆ, ஈ**

**3. "மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" எனக் கூறியவர் ………… .**

அ) வால்ட் விட்மன்  ஆ) எர்னஸ்ட் காசிரர்
இ) ஆற்றூர் ரவிவர்மா  ஈ) பாப்லோ நெரூடா

**விடை: இ) ஆற்றூர் ரவிவர்மா**

**4. "திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்துவிடுகிறது". இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை: இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது**

### குறுவினா

**1. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

அ.மா.வி, மு.ப.இடைத்தேர்வு, காலாண்டுத் தேர்வு 2018, தி.தேர்வு 2022, மார்ச் 2024

(i) எழுத்து மொழியில் எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

(ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

### சிறுவினா

**2. கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.**

(i) கவிதை என்பது ஒரு பொருளன்று. அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்துவிடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.

(ii) எனவே கவிதை என்பதே மொழிதான். ஆதலால், எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும், பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வது கவிஞனின் கடைமையாகும்.

**4. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

மு.தி.தேர்வு 2022, 2024, கா.தேர்வு & ஜூலை 2024

(i) என் உயிர் தமிழை என் தாய் எனப்போற்றுவேன். பிறமொழி கலவாமல் பேசுவேன்.

(ii) பிழைகள் நீங்க கற்பேன், கற்பிப்பேன். கம்பன், வள்ளுவன் இளங்கோ, பாரதி போன்ற புலவர்கள் புகழ் பாடுவேன்.

(iii) என் தாய்மொழியில் பெயர் சூட்டுவேன். பிறமொழி அறிவிப்புப் பலகைப் பெயர்களைத் தமிழில் வைக்க வலியுறுத்துவேன்.

(iv) இலக்கியம் படித்து, என்னால் முயன்ற இலக்கியம் படைப்பேன்.

### நெடுவினா

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

அரை.தேர்வு 2018 & 2023, ஜூன், கா.தேர்வு 2019, மார்ச் 2020 & 2024, தி.தேர்வு & மே 2022

**முன்னுரை:**

**மொழி என்பது ஒருவருக்கு மூன்றாவது வகை**

கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப்பேசுகிறது இக்கட்டுரை.

**பேச்சுமொழி:**

(i) எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக்(நெறியை) கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

(ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

(iii) பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.

(iv) இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே அவர்கள் **'நேரடி மொழி'** எனக் கருதுகின்றனர்.



www.surabooks.com

**எழுத்துமொழி:**

**(i)** ஒரு திரவ நிலையில் தான் விரும்பும் வகையில் தன்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

**(ii)** எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு.

**(iii)** பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல் தோல்போல் இயங்கும். ஆனால் எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடி விடுகின்றன.

**முடிவுரை:** **கலைகளின் உச்சம் கவிதை**

பேச்சுமொழி, எழுத்துமொழி இவைகள் மூலம் எவ்வாறு மொழியை வெளிப்படுத்தலாம் என்பதனை மேற்கண்ட கருத்துக்களின் மூலம் நாம் தெரிந்து கொண்டோம். எழுத்துமொழியைவிட பேச்சுமொழியே மொழியை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாக இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

## கற்பவை கற்றபின்

**1. பாரதியின் வசனகவிதைகளுள் உங்களுக்குப் பிடித்த கவிதையை வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

| இன்பம் | |
|---|---|
| இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமை யுடைத்து<br>காற்றும் இனிது தீ இனிது<br>நீர் இனிது நிலம் இனிது<br>ஞாயிறு நன்று திங்களும் நன்று<br>வானத்துச் சுடர்க ளெல்லாம் மிக இனியன<br>மழை இனிது மின்னல் இனிது இடி இனிது<br>கடல் இனிது மலை இனிது காடு நன்று<br>ஆறுகள் இனியன<br>உலோகமும் மரமும் செடியும் கொடியும்<br>மலரும் காயும் கனியும் இனியன | பறவைகள் இனியன<br>ஊர்வனவும் நல்லன<br>விலங்குகளெல்லாம் இனியவை<br>நீர் வாழ்வனவும் நல்லன<br>மனிதர் மிகவும் இனியர்!<br>ஆண் நன்று பெண் இனிது<br>குழந்தை இன்பம்<br>இளமை இனிது முதுமை நன்று<br>உயிர் நன்று சாதல் இனிது. |

**2. கவிதை குறித்துத் தமிழ்க்கவிஞர்களின் கருத்துகளைத் திரட்டி ஒப்படைவாக்குக.**

**முன்னுரை :**

கவிதை குறித்துத் தமிழ்க் கவிஞர்களின் கருத்துக்களைத் திரட்டி ஒப்படைவு செய்வதே இதன் நோக்கமாகும்.

**பாரதியார் :** எங்கோ இருப்பதாகக் கூறப்படும் இறைவனை ஏத்துவதையே தொழிலாகக் கொண்டிருந்த பழம் மரபினை மாற்றி நடமாடும் தெய்வங்களாம் மாந்தர்களை – மாந்தரின் வாழ்க்கைச் சிக்கலைப் பாடுவதே கவிதையின் பாடுபொருளாக இருக்க வேண்டும் எனப் பாதை காட்டினார்.

எளிய சிறிய கவிதைகளில் மக்களுக்குப் புரியும் வண்ணம் தம் கருத்துக்களை எடுத்து வைத்தார். அவரே தம் கவிதைகள் பற்றிச் 'சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது நவ கவிதை எந்நாளும் அழியாத மா கவிதை' என்று பொருளிலும் சுவையிலும் புரட்சி செய்யும் தம் கவிதைப் படைப்புக்களைப் பாராட்டுகிறார். புதுக்கவிதை தோன்ற வழி வகுத்தவர் பாரதியே. 'பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி' எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாரதியைப் போற்றிப் பாடுகிறார்.

**பாரதிதாசன் :**

**(i)** **இவர் பயன்படுத்திய பாடல் வகைகளாவன:** அகவல் எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், சிந்து, கண்ணி, கலிவெண்பா, நொண்டிச்சிந்து, கும்மி முதலியன.

**(ii)** **இவர் பாடிய பொருள்கள்:** தமிழ்மொழி, இயற்கை, சீர்திருத்தம், இல்லறமாண்பு, பொதுவுடைமை, அரண்மனை, சமத்துவம் முதலியன இவருடைய பாடல்கள் உரைநடை போல மிக எளிதில் புரிவன. இலக்கிய வகைகள், தனித்த தன்னுணர்ச்சிப் பாக்கள், குறுங்காப்பியம், நாடகம், சிறிய கதைப் பாடல்கள், உரைநூல் போன்றன.



www.surabooks.com

**நாமக்கல் கவிஞர் :**

(i) நாமக்கல்லார் காந்தியக் கவிஞர்.

(ii) “திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி தூவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது” என்றார் இராசாசி.

(iii) “கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது” எனப் பாடினார்.

(iv) “மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை... – அவனும் அவளும்

**சுரதா :** தடை நடையே அவர் எழுத்தில் இல்லை.
வாழைத் தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு.
படுத்திருக்கும் வினாக்குறி போல் மீசை வைத்த பாண்டியர்கள்.
இவை சுரதாவின் உவமைகளுக்கு எடுத்துக்காட்டு.

**முடிவுரை:** தம் கவிதையால் தமிழ் அன்னைக்குப் புகழ்மாலைச் சூட்டி மகிழ்ந்தனர் தமிழ்க் கவிஞர்கள்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. வால்ட் விட்மன் எந்த நாட்டைச் சார்ந்தவர்?** (மு.ப.இடைத்தேர்வு 2018)

அ) பிரான்சு ஆ) சிலி இ) அமெரிக்கா ஈ) இத்தாலி

**விடை: இ) அமெரிக்கா**

**2. ‘புல்லின் இதழ்கள்’ நூலின் ஆசிரியர்?** (ஜூன் 2019, மார்ச் 2024)

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே
இ) பாப்லோ நெரூடா ஈ) இந்திரன்

**விடை: அ) வால்ட் விட்மன்**

**3. கவிதையினை, ‘இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை’ என்றும் கூறியவர்** (மார்ச் 2020)

அ) பாரதியார் ஆ) இந்திரன் இ) பாரதிதாசன் ஈ) சுரதா

**விடை: அ) பாரதியார்**

**4. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்................** (தி.தேர்வு 2022)

அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா
இ) இந்திரன் ஈ) வால்ட் விட்மன்

**விடை: ஈ) வால்ட் விட்மன்**

**5. 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் :** (ஆகஸ்டு 2022)

அ) வால்ட் விட்மன் ஆ) ஆற்றூர் ரவிவர்மா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) பாப்லோ நெரூடா

**விடை: ஈ) பாப்லோ நெரூடா**

### குறுவினா

**1. கவிதை என்பது எது?** (செப்.2021)

(i) கவிதை என்பது ஒரு பொருளன்று. அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு. எனவே, கவிதை என்பதே மொழிதான்.

(ii) கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

### சிறுவினா

**1. வாளினும் வலிமை பெற்ற மொழியின் சிறப்பினை எழுதுக. (அல்லது)** (செப்.2021, தி.தேர்வு 2022)
**அதிகாரத்தை உருவாக்கிக் கொடுக்கும் மொழி ‘வாளினும் வலிமையானது’ என இந்திரன் கூறுவனவற்றை எழுதுக.**

(i) மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின்மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன்.

(ii) என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

**(iii)** ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது.

**(iv)** இந்தத் திட நிலையை அடைந்தமொழி அது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது.

**2. "நேரடி மொழி'' என்பதை நும்பாட வழி நின்று எழுதுக.** மே 2022

**(i)** பேச்சுமொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர். இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

**(ii)** நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒரு போதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை.

**(iii)** அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக் கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ் காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் ஆற்றூர் ரவிவர்மா.

**(iv)** பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல்போல் இயங்குகிறது. ஆனால், எழுத்துமொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கலைகளின் உச்சம் ................. என்பர்.**

அ) உரைநடை ஆ) கட்டுரை இ) கவிதை ஈ) புதினம்

**2. இந்திரனின் இயற்பெயர்..........**

அ) இராசேந்திரன் ஆ) இராமச்சந்திரன் இ) இராஜகோபாலன் ஈ) எதுவுமில்லை

**3. கீழ்க்கண்டவர்களுள் ஓரிய மொழிக் கவிஞர் யார்?**

அ) மல்லார்மே ஆ) மனோரமா பிஸ்வாஸ் இ) பாப்லோ நெரூடா ஈ) வால்ட்விட்மன்

**4. 'ஸ்டெஃபான் மல்லார்மே' – இவரோடு தொடர்புடைய ஒன்றைச் சுட்டுக.**

அ) குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்தது.

ஆ) இவர் கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச் சுருளைப் போன்று அல்லாமல் தளர்வோடு கட்டப்பட்டவை.

இ) இவரது கவிதைகள் வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றி பேசுகிறது.

ஈ) இவருடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று.

1) இ, ஈ 2) அ, ஆ 3) அ, ஈ 4) இ, ஆ

**5. தூங்கும்போது நான் நானாக இல்லையெனில் விழித்தெழுந்தபின் நான் யார்? – இக்கவிதை வரிகளை இயற்றியவர்.....**

அ) மல்லார்மே ஆ) வால்ட் விட்மன் இ) ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா

**6. இந்திரனின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்...........**

அ) சாம்பல் வார்த்தைகள் ஆ) முப்பட்டை நகரம்

இ) நவீன ஓவியம் ஈ) பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்

**7. கீழ்க்கண்டவற்றுள் இராசேந்திரன் நடத்திய இதழ் எது?........**

அ) நவீன ஓவியம் ஆ) தமிழ் அழகியல் இ) சாம்பல் வார்த்தைகள் ஈ) நுண்கலை

**8. பேச்சுமொழியை இவ்வாறு அழைப்பர்.**

அ) எழுத்து மொழி ஆ) நேரடி மொழி இ) கவிதை ஈ) திராவிட மொழி

**9. 'மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன' எனக் கூறியவர்............**

அ) எர்னஸ்ட் காசிரர் ஆ) பாரதியார் இ) இந்திரன் ஈ) வால்ட் விட்மன்

**10. எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி .................... மிக அருகில் உள்ளது.**

அ) கேட்பதற்கு ஆ) பேசுவதற்கு இ) உணர்ச்சிக்கு ஈ) புரிதலுக்கு

**11. பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் ................ போல் இயங்குகிறது.**

அ) கண் ஆ) உயிர் இ) இதயம் ஈ) மேல் தோல்

**12. ஸ்டெஃபான் மல்லார்மே எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

அ) அமெரிக்கா ஆ) பிரான்சு இ) இத்தாலி ஈ) சிலி

**13. லத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர்................**

அ) மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன் ஈ) நோரா லாங்கே

விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. இ) கவிதை | 2. அ) இராசேந்திரன் | 3. ஆ) மனோரமா பிஸ்வாஸ் |
| 4. 3) அ, ஈ | 5. ஈ) பாப்லோ நெரூடா | |
| 6. ஈ) பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம் | | 7. ஈ) நுண்கலை |
| 8. ஆ) நேரடி மொழி | 9. அ) எர்னஸ்ட் காசிரர் | 10 இ) உணர்ச்சிக்கு |
| 11. ஈ) மேல் தோல் | 12. ஆ) பிரான்சு | 13. ஆ) பாப்லோ நெரூடா |

## குறுவினா

**1. இந்திரனின் கவிதைத் தொகுப்பு நூல்கள் யாவை?**

முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள் போன்றன இந்திரனின் கவிதைத் தொகுப்பு நூல்கள் ஆகும்.

**2. வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதை நூல் எது?**

வால்ட் விட்மனின் உலகப்புகழ் பெற்ற கவிதை நூல் **'புல்லின் இதழ்கள்'**.

**3. எர்னஸ்ட் காசிரர் கூற்றினை விளக்குக.**

மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன என்கிறார் எர்னஸ்ட் காசிரர்.

**4. இந்திரனின் கட்டுரை நூல்களை எழுதுக.**

**இந்திரனின் கட்டுரை நூல்கள் :**

(i) தமிழ் அழகியல்

(ii) நவீன ஓவியம் போன்றனவாகும்.

**5. இந்திரன் நடத்திய இதழ்களின் பெயர்களை எழுதுக.**

(i) வெளிச்சம்

(ii) நுண்கலை போன்றவை இந்திரன் நடத்திய இதழ்களாகும்.

**6. இராசேந்திரன் அவர்களுக்கு எவ்வருடம், எந்நூலுக்கு சாகித்திய அகாடமி விருது கிடைத்தது?**

(i) **வருடம் :** 2011

(ii) **நூலின் பெயர் :** 'பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்.'

**7. கவிஞனின் கவிதை அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது. எப்போது?**

(i) எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.

(ii) எனவே தான் இலக்கிய வழக்கை விட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதை அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

**8. நேரடி மொழி என்றால் என்ன?**

கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர். இதையே நேரடிமொழி என்கின்றனர்.

www.surabooks.com

**சிறுவினா**

**1. மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன எவை?**

(i) உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன.

(ii) அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்தி பொருள் வேறுபாடுகளை உணரமுடியும்.

(iii) கைகால் அசைவுகள், முகத்தின் தசை நார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் ஆகியவை மொழி வெளிப்பாட்டின் பகுதியாக உள்ளன.

**2. நேரடி மொழி குறித்து மலையாளக்கவி ஆற்றூர் ரவிவர்மா கூறுவது யாது?**

(i) நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒரு போதும் பழமை தட்டுவதில்லை.

(ii) அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக் கொண்டும் இருக்கிறது.

(iii) இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் ஆற்றூர் ரவிவர்மா.

**3. பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்தும் வால்ட்விட்மன் பற்றி இந்திரன் கூறுவது யாது?**

(i) இவருடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானதாகி விடுவதில்லை.

(ii) எழுத்துகள் எப்படிச் சொற்களில் கரைந்து போகின்றனவோ அதுபோன்று சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை. கவிதையில் சொற்கள் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்வதில்லை.

(iii) இக்கவிதைகள் பேச்சு மொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை.

(iv) நடனமாடுபவன் நடப்பதற்கு தாவிவிடுவதுபோல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவிவிடும்.

**4. பாப்லோ நெரூடா கவிதைகள் குறித்து இந்திரன் கூறுவது யாது?**

(i) இவரது கவிதை ஒரு பொருளைப் பற்றியது அல்லாமல் வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது.

(ii) கவிதை ஒரு வடிவம் பெற வேண்டும் என்பதை நோக்கி தொடர்ந்து முயல்கிறபோதும் அது வெற்றி கொள்வதில்லை.

(iii) இதுபோன்ற கவிதை, எவ்வித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவது போலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்து போகிறது.

(iv) தெரியாத ஒன்றை நோக்கி நகர்கிறபொழுது நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

**5. 'நான்', உலகம் என்பது குறித்து இந்திரன் கூறுவது யாது?**

(i) மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது.

(ii) இதன் பிறகுதான் 'நான்' என்ற ஒன்று பிறந்தது.

(iii) எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு அந்த உலகத்திலிருந்து தனித்துப் பிரிந்து நிற்கிற 'நான்' உதயமானேன்.

**6. என்னை விளக்கிய மொழி என்று ஆசிரியர் இந்திரன் உணர்த்தும் செய்திகள் யாவை?**

(i) மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழைஇழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்துக் கொடுத்தது மொழி. இதன் மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறக்கலாயின.

(ii) மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கிற போதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன். அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன்.

(iii) பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது. அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

## நெடுவினா

1. மூன்று வகையான கவிஞர்கள் பற்றி இந்திரன் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக. (அல்லது) பெருங்கவிஞர்களின் வாய்மொழி குறித்து ஆசிரியர் இந்திரன் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. ஆசிரியர் இந்திரன் கூறும் மூன்று வகையான கவிஞர்கள் |
| 3. முடிவுரை |

**முன்னுரை :**

**கவிஞனின் கற்பனை – உலகம் தாண்டி வாழும்**

பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்கள் மூன்று வகையினர் உண்டு. உலகின் சிறந்த கவிஞர்களான வால்ட்விட்மன் முதல்வகை, மல்லார்மே இரண்டாம் வகை, பாப்லோ நெரூடா மூன்றாம் வகை. இவர்களின் கவிதை தன்மைப் பற்றி இங்குக் காண்போம்.

**ஆசிரியர் இந்திரன் கூறும் மூன்று வகையான கவிஞர்கள்:**

**முதல் வகையினர்:**

**வால்ட்விட்மனைப்** போன்றவர்கள். இவர்களுடைய கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானது இல்லை. எழுதப்படுகின்ற எழுத்துகள் சொற்களில் கரைந்து போவதைப் போல சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.

கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச் சுருளைப் போல் அல்லாமல் பேச்சுமொழிக்கேற்றாற் போல் தளர்வோடு இருக்கும். பல நேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன் அவ்வப்போது நடப்பதற்குத் தாவி வருவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும்.

**இரண்டாம் வகையினர்:** ஆகஸ்டு 2022

கவிஞர் **'மல்லார்மே'** போன்றவர்கள் இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. எதிரில் ஒருவரை வைத்துக் கொண்டு பேசுவதைப்போல் இல்லாமல் தனிமையில் தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்வதைப் போல் இருக்கும். தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்வதாகும். இவர்களின் கவிதைகளைக் குறியீட்டுக் கவிதைகள் என்று கூறலாம்.

**மூன்றாம் வகையினர்:**

ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய **'பாப்லோ நெரூடா'** போன்றவர்கள் கவிதை ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. இவர்களது கவிதை வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறதே தவிர வாழ்க்கை வடிவத்தை வெற்றி கொள்வது இல்லை. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலத் தோன்றினாலும் எதையும் சுட்டாமல் முடிந்து விடுவதைப் போன்றதாக உள்ளது.

**முடிவுரை :**

**வரையறைக்குள் அடங்காதது கவிதை**

கவிதை என்பது எது? என்ற இந்த கேள்விக்கு எனக்குத் தற்சமயம் கிடைக்கும் விடை இதுதான். கவிதை என்பது ஒரு பொருளன்று, அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு. ஆகவே மொழியின் குணாம்சங்களையும், பேச்சுவழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

☆ ☆ ☆

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி, கலை

# ஒவ்வொரு புல்லையும்

- இன்குலாப் கவிதைப்பேழை

## கரு

✳ மனிதம் என்பதற்கு ஒரு சிறிய வரையறை என்னவென்றால் இயற்கையோடு சேர்ந்து வாழ்தல், மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருத்தல், துன்புறும் உயிர்களை அத்துன்பத்திலிருந்து காத்தல், சாதி, மதம், இனம், மொழி, நிறம், செல்வம், கல்வி என்ற பேதங்களை நீக்கி ஒன்றுபட்டு வாழ்தலும், ஒற்றுமை உலகைப் படைப்பதும் மனிதம் ஆகும் என்ற இக்கருத்தை இன்குலாப்பின் இக்கவிதை எடுத்துரைக்கிறது.

✳ இக்கவிதையில் கவிஞர் தன்னை உருவகப்படுத்திக் கொள்ளும் அழகு பாராட்டத்தக்கது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | இன்குலாப் |
| இயற்பெயர் | : | சாகுல் அமீது |
| கவிதை நூல் | : | 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' |
| சிறப்பு | : | கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர். மரணத்துக்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக்கல்லூரிக்கு அளிக்கப்பட்டது. |

**கூடுதல் தகவல்:**

- காலம் 1944 - 2016
- இன்குலாப் என்பதற்கு 'புரட்சி' என்று பொருள்.
- 2017 ஆம் ஆண்டில் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது இவர் எழுதிய காந்தள் நாட்கள் என்னும் நூலுக்கு வழங்கப்பட்டது.
- தராசு, நக்கீரன், இனி, நாற்காலி, உண்மை எனப் பல இதழ்களில் இவரின் கட்டுரை, கவிதைகள் வெளிவந்தன.
- 12 கவிதைத் தொகுதி, 1 சிறுகதைத் தொகுதி, 2 கட்டுரைத் தொகுதி, 6 நாடக நூல்கள், மொழிபெயர்ப்பு என பல நூல்களைப் படைத்தவர்.

**விருது:** சாகித்திய அகாதெமி விருது, சிற்பி இலக்கிய விருது, கவிஞர் வைரமுத்து விருது
2006 ஆம் ஆண்டு தனக்கு வழங்கப்பட்ட கலைமாமணி விருதினைத் திருப்பி அளித்தார். ஈழத் தமிழர்களைக் காக்க அரசு தவறிவிட்டதாக இதற்குக் காரணம் தெரிவித்தார்.

## நூற்குறிப்பு

1999 இல் வெளியான 'ஒவ்வொரு புல்லையும்' என்ற கவிதைத்தொகுப்பு, இவரின் அனைத்துக் கவிதைகளும் அடங்கிய ஒரு நூல். 1972 முதல் 2004 வரை இவர் எழுதிய கவிதைகளின் தொகுதி. இரண்டாம் பதிப்பாக 2004-இல் வெளியானது. இதில் இக்கவிதை இடம்பெற்றிருக்கிறது.

## பாடல்

**ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்**
**பறவைகளோடு எல்லை கடப்பேன்**
**பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்**
**எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்**
**நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கையிலும் நெஞ்சம் படரும்**
**எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்**
**உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்**
**கூவும் குயிலும் கரையும் காகமும்**
**விரியும் எனது கிளைகளில் அடையும்.**
**போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்**
**பொங்கும் சமத்துவப்புனலில் கரையும்!**
**எந்த மூலையில் விசும்பல் என்றாலும்**
**என் செவிகளிலே எதிரொலி கேட்கும்.**
**கூண்டில் மோதும் சிறகுகளோடு**
**எனது சிறகிலும் குருதியின் கோடு!**
**சமயம் கடந்து மானுடம் கூடும்**
**சுவர் இல்லாத சமவெளி தோறும்.**
**குறிகள் இல்லாத முகங்களில் விழிப்பேன்**
**மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்!**

– இன்குலாப்



www.surabooks.com

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. எல்லை – நாடுகளுக்கு இடையே வரையறுக்கப்பட்டப் பகுதி | 6. தோழமை – நட்பு |
| 2. போதி – புத்தர் ஞானம் அடைந்த மரம், தமிழில் அரச மரம் | 7. சமத்துவம் – ஒற்றுமை |
| 3. சிலுவை – கிறித்துவ சமயத்தின் சின்னம், குறியீடு | 8. பிறை – நிலா |
| 4. குறிகள் – சமயம் சார்ந்த குறியீடுகள் | 9. விரியும் – விரிந்து கிடக்கும் |
| 5. விசும்பல் – ஒலி | 10. புனல் – வெள்ளம், நீர் |

## பொருளுரை

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன். பறவைகளோடு எல்லை கடந்து போவேன். பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தனக்குத் தெரிந்த சொற்களால் அழைப்பேன். நீளும் கைகளில் தோழமை தொடருமாம். நீளாத கையிலும் நெஞ்சம் படருமாம். உலகமே கடலாக வேண்டும். அதில் நான் ஓர் துளியாய் இருக்க வேண்டும். குயிலும், காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும். எந்த மூலையில் அழும் குரல் ஒலித்தாலும் என் செவிகளில் வந்து எதிரொலிக்கும். கூண்டில் மோதும் சிறகுகளோடு மோதி காயம் ஏற்படுவதால் என் நெஞ்சம் பதறுகிறது. சாதி சமயம் இல்லாத, மனிதநேயம் எங்கும் பரவிட வேண்டும்.

**விரிவான விளக்கம் :**

**புல்லைப் பெயர் சொல்லி அழைப்பேன்:**

உலகத்தில் உள்ள உயிர்கள் ஏதோ ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன. புல் அளவில் சிறியது. ஆனால் புல் இருக்கும் இடமே உயிர்கள் வாழத் தகுதியுள்ள இடமாகும். புல் இல்லையேல் உயிரினங்கள் இல்லை. அதைச்சார்ந்த விலங்கினங்களும் இல்லை. விலங்குகள் பறவைகள் இல்லையெனில் மனித உயிரினமும் இல்லாமல் போகும். ஆகவே, உலகத்தின் இயக்கத்திற்குக் காரணமாக அமைந்த ஒவ்வொரு புல்லையும் நான் பெயர் சொல்லி அழைப்பேன் என்கிறார்.

**பறவைகளோடு எல்லை கடப்பேன்:**

தான் மனம் விரும்பிய இடமெல்லாம் பறந்து, எல்லைகளைக் கடந்து, தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இயல்புடையவை பறவைகள். அவைபோன்று மனிதர்களை வேறுபடுத்தும் சாதி, மதம், இனம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்து மனித சமூகத்திற்கு பயனுள்ள வகையில் வாழ்ந்து என் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற செயலாற்றுகின்றேன்.

**கல்லுக்கும் மண்ணுக்கும் பெயரிடுவேன்:**

இவ்வுலகம் கற்களாலும் மணலாலும் ஆனது. இவை இல்லையென்றால் உயிர்கள் உயிர்வாழ முடியாது. ஆகவே அவற்றைப் பாதுகாத்து அவற்றிற்கு நான் விரும்பியபடி பெயர் சூட்டி மகிழ்வேன்.

**தோழமை கொள்வேன்:**

இவ்வுலகில் மனிதன் அல்லாத எந்த உயிரினமும் வேற்றுமை கொண்டு வாழ்வதில்லை. அவற்றைப்போல் நானும் அனைவரிடமும் வேற்றுமை பாராமல் நட்பாக இருக்க விரும்புகின்றேன். நட்புணர்வோடு நீளுகின்ற என் கரங்களை ஏற்பவரோடு நான் அன்பு பாராட்டுவேன். என்னை விரும்பாதவர்களிடம் என் பாசத்தையும் பரிவையும் பகிர்ந்து கொள்வேன்.

**கடலில் நான் ஓர் துளியாவேன்:**

கடல் தனக்குள் எண்ணற்ற உயிரினங்களைக் கொண்டிருக்கிறது. ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. சிறியது பெரியது நல்லது கெட்டது என எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது. அதுபோல கவலை, இன்பம், துன்பம், ஏற்றம், இறக்கம் என எல்லாம் எனக்குள் வந்தாலும் அதைத் தாங்கக்கூடிய வலிமை வேண்டும்.

இந்த உலகமே எனக்கு கடலாக மாறவேண்டும். கடலைப்போன்று நானும் இந்த உலகிற்கு நன்மைகளை செய்ய வேண்டும். அந்தக் கடலில் நானும் ஒரு துளியாக இணைய வேண்டும்.

**சமத்துவப் புனல்:**

போதி மரத்தினடியில் ஞானம் பெற்ற புத்தனும் சிலுவையை வணங்கும் கிறித்தவரும், பிறை பார்த்து நோன்பு நோர்க்கும் இசுலாமியரும் சமத்துவம் என்ற கடலில் கலந்து ஒன்றாக வேண்டும்.

**எல்லா உயிரும் என் உயிரே:**

எந்த உயிரையும் தம் உயிர்போல் எண்ணி வாழக்கூடியவனே வாழத் தகுதியுடையவன் ஆவான். மனிதர்களோ பிற உயிர்களோ துன்பப்படுகையில் உதவுவதற்கு என் கரங்கள் நீளும்.

கூண்டில் அடைக்கப்பட்ட பறவை கூண்டைவிட்டு வெளிவர முயற்சிக்கும்போது சிறகுகள் முறிந்து இரத்தம் சிந்தித் துன்புறும். ஆனால் முயன்று வெளியே வந்துவிட்டால் அந்த வலிகள் யாவும் நீங்கிச் சுதந்திரமாக வாழும். அதுபோல மனிதர்களும் தமக்குத் துன்பம் விளைவிக்கின்ற சூழ்நிலைகளில் இருந்து வெளியேற முயற்சிக்கும்போது காயங்கள் ஏற்படினும், வெற்றியுடன் வாழலாம் என்ற தத்துவத்தை அப்பறவையிடம் கற்றேன்.



www.surabooks.com

**சமயம் கடந்த மானுடம்:**

புல், பறவை, மரம், கடல் போல வாழ்ந்து காட்டுவேன். சமத்துவ உலகைப் படைப்பேன். இசுலாம், கிறித்துவம், இந்து என்ற மதங்களைக் குறிக்காத முகங்களில் விழிப்பேன். அப்போது 'மனிதம் என்றொரு பாடலை இசைத்து மகிழ்வேன்' என்று கவிஞர் பாடுகிறார். இக்கவிதையின் மூலம் சமத்துவ உலகைக் காண விரும்பிய கவிஞரின் விருப்பத்தை அறிய முடிகிறது.

## இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. சொல்லி, கடந்து – வினையெச்சங்கள் | 2. சமத்துவப்புனல் – உருவகம் |
| 3. தெரியாத, சுவரில்லாத – பெயரெச்சங்கள் | 4. எல்லை கடப்பேன் – இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| 5. கூவும் குயிலும், கரையும் காகமும், சிலுவையும் பிறையும், கல்லையும் மண்ணையும் – எண்ணும்மைகள் | |
| 6. அழைப்பேன், விளிப்பேன், கடப்பேன், விழிப்பேன், இசைப்பேன்– தன்மை ஒருமை வினைமுற்றுகள் | |
| 7. கூவும், அடையும், கரையும், நீளும், விரியும், பொங்கும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் | |

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **விழிப்பேன் – விழி + ப் + ப் + ஏன்**<br>விழி – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | **இசைப்பேன் – இசை + ப் + ப் + ஏன்**<br>இசை – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி |
| **அழைப்பேன் – அழை + ப் + ப் + ஏன்**<br>அழை – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | **விளிப்பேன் – விளி + ப் + ப் + ஏன்**<br>விளி – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி |
| **கடந்து – கட + த்(ந்) + த் + உ**<br>கட – பகுதி<br>த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **பொங்கும் – பொங்கு + உம்**<br>பொங்கு – பகுதி<br>உம் – பெயரெச்ச விகுதி |

## புணர்ச்சி விதிகள்

1. **சமத்துவப்புனல் – சமத்துவம் + புனல்**

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' எனும் விதிப்படி 'ம்' நீங்கியது. பின்பு

'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதபமிகும்' எனும் விதிப்படி 'ப்' மிகுந்து

சமத்துவ+(ப்)+புனல் = சமத்துவப்புனல் என்றானது.

# நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

## குறுவினா

3. **''நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கைகளில் நெஞ்சம் படரும்'' – தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

(i) **மோனை :** நீளும் – நீளாத, சீர்மோனை : நீளாத – நெஞ்சம்

(ii) **எதுகை :** நீளும் – நீளாத

(iii) **இயைபு :** தொடரும் – படரும்

(iv) **முரண் :** நீளும் × நீளாத.

## சிறுவினா

**3. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.** மார்ச் 2020

(i) கடல் ஓய்வில்லாமல் ஒலித்துக் கொண்டிருக்கும் இயல்புடையது.

(ii) அது எண்ணற்ற உயிரினங்களை வாழ வைக்கிறது.

(iii) தன்னிடம் வரும் நன்மையோ, தீமையோ எதுவாயினும் தன்னுள் அடக்கி வைக்கும் வலிமை கொண்டது.

(iv) அதனால், இந்த உலகமே எனக்குக் கடலாக மாறவேண்டும்.

(v) உலகுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து அந்தக் கடலில் நானும் ஒரு துளியாக இணைய வேண்டும் என்று நயம்படக் கூறுகிறார்.

## நெடுவினா

**2. 'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக.**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. புல்லையும் பெயர் சொல்லி அழைத்தல் |
| 3. பறவைகளோடு எல்லை கடத்தல் |
| 4. கல்லுக்கும் மண்ணுக்கும் பெயரிடுதல் |
| 5. தோழமை கொள்ளுதல் |
| 6. கடலில் ஓர் துளியாகக் கடத்தல் |
| 7. மரமாக மாறவேண்டும் |
| 8. சமத்துவப்புனல் |
| 9. எவ்வுயிரையும் தம்முயிராய் எண்ணல் |
| 10. முடிவுரை |

**முன்னுரை :**

மனிதம் என்பதற்கு ஒரு சிறிய வரையறை என்னவென்றால் இயற்கையோடு சேர்ந்து வாழ்தல். மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருத்தல், துன்புறும் உயிர்களை அத்துன்பத்திலிருந்து காத்தல், சாதி, மதம், இனம், மொழி, நிறம், செல்வம், கல்வி என்ற பேதங்களை நீக்கி ஒன்றுபட்டு வாழ்தலும் ஒற்றுமை உலகைப் படைப்பதும் மனிதம் ஆகும்.

**புல்லையும் பெயர் சொல்லி அழைத்தல் :**

உலகத்தில் உள்ள உயிர்கள் ஏதோ ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன. அளவில் சிறியதாக இருந்தாலும் அது வாழும் இடமே உயிர்கள் வாழத் தகுதியுள்ள இடமாகும். புல் இல்லையேல் உயிரினங்கள் இல்லை. அதைச்சார்ந்த விலங்கினங்களும் இல்லை. விலங்குகள், பறவைகள் இல்லையெனில் மனித உயிரினமும் இல்லாமல் போகும். ஆகவே உலகத்தின் இயக்கத்திற்குக் காரணமாக அமைந்த ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைத்தல் மூலம் மனிதத்தை வெளிப்படுத்துகிறார்.

**பறவைகளோடு எல்லை கடத்தல் :**

தான் மனம் விரும்பிய இடமெல்லாம் பறந்து பறந்து எல்லைகளும் கடந்து தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இயல்புடையவை பறவைகள். அவை போன்று மனிதர்களை வேறுபடுத்தும் சாதி, மதம், இனம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்த மனித சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் வாழவேண்டும்

**கல்லுக்கும் மண்ணுக்கும் பெயரிடுதல் :**

இவ்வுலகம் கற்களாலும், மணலாலும் ஆனது. இவை இல்லையென்றால் உயிர்கள் உயிர்வாழ முடியாது. அவற்றிற்கும் பெயர்சூட்டி தன் மனித நேயத்தைக் காட்டுகிறார்.

**தோழமை கொள்ளுதல் :**

இவ்வுலகில் மனிதன் அல்லாத எந்த உயிரினமும் வேற்றுமை கொண்டு வாழ்வதில்லை. அவற்றைப் போல் நாமும் அனைவரிடமும் வேற்றுமை பாராமல் நட்பாக இருக்க வேண்டும். அனைவருடனும் நட்புணர்வோடு அன்பு பாராட்ட வேண்டும். நம்மை விரும்புபவர்களிடமும் பாசத்தையும் பகிர்வையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**கடலில் ஓர் துளியாகக் கலத்தல் :**

கடல் தனக்குள் எண்ணற்ற உயிரினங்களைக் கொண்டிருக்கிறது. ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. சிறியது, பெரியது, நல்லது, கெட்டது என எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொள்ளும் வலிமை கொண்டது.

அதுபோல கவலை, இன்பம், துன்பம், ஏற்றம், இறக்கம் என எல்லாம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு கடலைப் போன்று இந்த உலகிற்கு நன்மைகளைச் செய்ய வேண்டும். கடலில் ஓர் துளியாய் இணைய வேண்டும்.

**மரமாக மாறவேண்டும் :**

ஒரே மரத்தில் பறவையினங்கள் அனைத்தும் வேற்றுமையின்றி தங்கி இளைப்பாறுகின்றன. உயிரினங்களின் பசியைப் போக்கி அவை வாழ்வதற்கு உறுதுணையாக நிற்கிறது. அதுபோல மனிதர்களிடத்து வேற்றுமை பாராமல் விருப்பு வெறுப்பின்றி செயல்பட வேண்டும்.

**சமத்துவப்புனல் :**

போதி மரத்தினடியில் ஞானம் பெற்ற புத்தனும், சிலுவையை வணங்கும் கிறித்துவரும், பிறை பார்த்து நோன்பு நோர்க்கும் இசுலாமியரும் சமத்துவம் என்ற கடலில் கலந்து ஒன்றாக வேண்டும்.

**எவ்வுயிரையும் தம்முயிராய் எண்ணல் :**

எவ்வுயிரையும் தம் உயிர்போல் எண்ணி வாழக்கூடியவனே வாழத்தகுதியுடையவன் ஆவான். பிறர் துன்பம் கண்டு உதவிட வேண்டும். கூண்டில் அடைப்பட்ட பறவைகள் முயற்சி செய்து வெளியே வந்துவிட்டால் வலி நீங்கி சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும். அதுபோல மனிதனாகப் பிறந்த யாவரும் தனக்குத் துன்பம் விளைவிக்கின்ற சூழ்நிலைகளில் இருந்து வெளியேறும் போது துன்பங்கள் ஏற்படினும் வெற்றியுடன் வாழலாம் என்பதை உணர வேண்டும்.

**முடிவுரை :**

புல், பறவை, மரம், கடல் போல வாழவேண்டும். சமத்துவ உலகைப் படைத்து சாதி மத வேறுபாடின்றி வாழ வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**1. மனிதநேயம் பேசும் கவிதைகள் எவையேனும் ஐந்தைத் திரட்டி வகுப்பில் பகிர்க.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

**2. இயற்கையும் மனிதனும் என்னும் தலைப்பில் வகுப்பறையில் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**கண்ணன் :** முரளி, நீ ஏன் நேற்று பள்ளிக்கு வரவில்லை?

**முரளி :** நான் என் பெற்றோருடன் கொல்லிமலைக்குச் சென்றிருந்தேன். இரவு வருவதற்கு காலதாமதமாகி விட்டது. அதனால் பள்ளிக்கு வர இயலவில்லை.

**குமரன் :** அப்படியா? எப்படி இருந்தது உன் கொல்லிமலை அனுபவம்?

**முரளி :** மிகவும் நன்றாக இருந்தது. பச்சைப் பசேல் என்ற காட்சியும் உடலுக்கும் மனதுக்கும் இதமான காற்றும் நம்மை மெய்மறக்கச் செய்கிறது.

**கண்ணன் :** சென்னை போன்ற நகரங்களில் இயற்கையான காற்றைச் சுவாசிப்பதே அரிதாக உள்ளதே, நம் முன்னோர்களை நாம் பின்பற்றவே இல்லை.

**முரளி :** ஆமாம். நம்மைச் சுற்றியுள்ள மலை, காடு, ஆறு, நிலம் போன்ற இயற்கையைக் கண்டு வியந்தனர். அவற்றைக் கடவுளாக எண்ணி வழிபட்டனர். முறையாக உழைத்து வாழ்வில் வெற்றி கண்டனர்.

**குமரன் :** அதுமட்டுமா? நாளாக நாளாக உடன் இருந்த விலங்குகளை வாகனமாகப் பயன்படுத்தி வண்டிகளை உருவாக்கினான். ஐம்பூதங்களை, ஐம்புலன்களோடு ஒப்பிட்டான். ஆகாயம் – செவிமடுத்தல், காற்று – நுகர்தல், நெருப்பு – பார்வை, நீர் – சுவை, பூமி – தொடுதல் என ஒப்புமைப்படுத்தினான். இவ்வாறெல்லாம் செய்த மனிதன் அவற்றைப் பாதுகாக்க மறந்தான்.

**முரளி :** தன் தேவைகளுக்கு அவற்றை அழிக்க முற்பட்டபோது உயிரினங்களும் துன்பப்படுகின்றன. மனிதனும் துன்பப்படுகிறான். ஆற்றில் இறங்கும் போதும், சாலையில் பயணிக்கும் போதும் எத்தீங்கும் நேரக் கூடாது என்பதில் கவனம் செலுத்தும் நாம் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வின்றி இருக்கிறோம் என எண்ணினால் வருத்தமாகத்தான் உள்ளது.

**குமரன் :** உணவிற்காக உழவுத்தொழிலைச் செய்யும் உழவர்கள் செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை முறையில் விவசாயம் செய்ய வேண்டும்.

**கண்ணன் :** இயற்கையை அழித்தால் வரும் ஆபத்தை அறிந்து அவணியை அல்லலப்படுத்தாமல் இருக்கவேண்டும். நிகழ்கால மகிழ்ச்சியை எண்ணி வருங்காலத் துன்பத்தை வரவேற்கக் கூடாது. இயற்கையை நேசித்து அதனைப் பாதுகாக்க வேண்டும்.

**முரளி :** வீட்டிற்கோர் மரத்தை வளர்ப்போம், காடுகளை அழிக்க மாட்டோம், மலைகளைத் தகர்க்க மாட்டோம். வருங்கால உலகத்தைக் காப்போம் உன உறுதியேற்போம்.



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

## அரசு தேர்வு வினா - விடைகள்

**1. இன்குலாபின் கவிதைகள், முழுமையாக ............ என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.** செப். 2020

அ) உயிர்த்தெழும் காலத்துக்காக

ஆ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்

இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

ஈ) கூவும் குயிலும் கரையும் காகமும்

**விடை:** இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. இன்குலாப் அவர்களின் இயற்பெயர்.............**

அ) சாகுல் அமீது ஆ) அப்துல் அமீது இ) அப்துல் ரகுமான் ஈ) அப்துல் காதர்

**2. கூவும் குயிலும் – இலக்கணக் குறிப்பு யாது?**

அ) முற்றும்மை ஆ) வினையெச்சம் இ) உருவகம் ஈ) எண்ணும்மை

**3. 'போதியின் நிழலும் சிலுவையும் பொறையும்' இதில் சிலுவையும் பொறையும் என்பதன் இலக்கணக் குறிப்பு ...............**

அ) உம்மைத்தொகை ஆ) உருவகம் இ) எண்ணும்மை ஈ) அன்மொழித்தொகை

**4. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்னும் கூற்றைக் கூறியவர் ..............**

அ) இன்குலாப் ஆ) பாரதிதாசன் இ) பாரதியார் ஈ) தாகூர்

**5. குறிகள் இல்லாத முகங்களில் விழிப்பேன் என்ற கவிதை வரி இடம்பெற்ற நூல் ...............**

அ) ஒவ்வொரு புல்லையும் ஆ) புலிநகச்சுவடுகள்

இ) வெள்ளை இருட்டு ஈ) காந்தள் நாட்கள்

**6. கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும் – என்று பாடியவர் .............**

அ) பாரதியார் ஆ) வைரமுத்து இ) இன்குலாப் ஈ) பாரதிதாசன்

விடைகள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அ) | சாகுல் அமீது | 2. | ஈ) | எண்ணும்மை |
| 3. | இ) | எண்ணும்மை | 4. | இ) | பாரதியார் |
| 5. | அ) | ஒவ்வொரு புல்லையும் | 6. | இ) | இன்குலாப் |

### குறுவினா

**1. இன்குலாப்பின் குரலாக ஒலிப்பது எது?**

காக்கை குருவி எங்கள் ஜாதி என்னும் மகாகவி கூற்றின் நீட்சியே, கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும் என்பதே இன்குலாபின் குரலாக ஒலிக்கிறது.

**2. இன்குலாப் கவிதையில் இடம்பெற்ற தன்மை ஒருமை வினைமுற்றை எழுதுக.**

(i) அழைப்பேன் (ii) கடப்பேன் (iii) விளிப்பேன்

(iv) விழிப்பேன் (v) இசைப்பேன்

**3. நட்பு பற்றி இன்குலாப் கூறுவது யாது?**

(i) நட்புணர்வோடு நீளுகின்ற என் கரங்களை ஏற்பவரோடு நான் அன்பு பாராட்டுவேன்.

(ii) என்னை விரும்பாதவர்களிடம் என் பாசத்தையும் பரிவையும் பகிர்ந்து கொள்வேன்.

**4. எங்கு விழிப்பதாக இன்குலாப் குறிப்பிடுகிறார்?**

இசுலாம், கிறித்துவம், இந்து போன்ற மதங்களின் சாயம் இல்லாத முகங்களில் விழிப்பேன் என்கிறார்.

**5. சமத்துவ புனலில் கரையும் என இன்குலாப் எதைக் குறிப்பிடுகிறார்?**

போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரும், சிலுவையைச் சின்னமாகக் கொண்ட கிறித்துவரும், பிறை பார்த்து நோன்பிருக்கும் இசுலாமியரும் வேறுபாடின்றி சமத்துவம் என்ற கடலில் கலந்து ஒன்றாக வேண்டும் என்கிறார்.

www.surabooks.com



**சிறுவினா**

**1. இன்குலாப் - ஆசிரியர் குறிப்பு வரைக.**

(i) சாகுல் அமீது என்னும் இயற்பெயருடைய இன்குலாப் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர்.

(ii) அவருடைய கவிதைகள், '**ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்**' என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(iii) மரணத்துக்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக்கல்லூரிக்கு அளிக்கப்பட்டது.

**2. எவையெல்லாம் செய்வதாக கவிஞர் இன்குலாப் பாடுகிறார்?**

(i) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைக்க.

(ii) பறவைகளோடு நாட்டின் எல்லையைக் கடக்க.

(iii) பெயர் தெரியாத கல், மண்ணை பெயர் சொல்லி அழைக்க.

(iv) சமயச்சாயம் பூசாத முகங்களில் விழிக்க

(v) மனிதம் என்ற பாடலை இசைக்க போன்றவற்றை எல்லாம் செய்வதாகக் கவிஞர் இன்குலாப் பாடுகிறார்.


☆☆☆

என்னுயிர் என்பேன் - மொழி, கலை

# இயல் 1 இசைத்தமிழர் இருவர்

விரிவானம்

**கரு**



✳ தமிழகத்தில் காடு,மேடு,வயல் என எல்லா இடங்களிலும் தவழ்ந்த இசையைச் சீராட்டி அதற்கு மெரு கூட்டி உலகுக்குத் தந்து மகிழ்ந்தவர் இருவர்.

✳ 1. சிம்பொனித் தமிழர் இளையராஜா

2. ஆஸ்கார் தமிழர் ஏ.ஆர். இரகுமான்

✳ தனக்கெனத் தனி முத்திரைப் பதித்தவர்கள் இசையுலகில் பெரும் புகழ்பெற்ற ஒப்பற்ற இசைமேதைகள் இவர்களின் இசைப்பங்குப் பற்றி இவ்வானம் விரிகிறது.

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

**நெடுவினா**

**3. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

அ. தேர்வு 2018, மார்ச் 2019, 2020 & 2024, செப். 2020, ஆகஸ்டு 2022, மு.திருப்புதல் தேர்வு 2024

**முன்னுரை :**

கலைகளின் மகுடம் இசை! உணர்வுகளுக்கு உயிர் கொடுப்பவை இசைகள். குருதியைச் சூடேற்றும் உயிரை உருக்கும் அமைதியாய் மனதை உருவாக்குபவர்களே இசை மேதைகள். அத்தகைய தமிழகத்தின் மாபெரும் இசைமேதைகளான இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளைக் காண்போம்.

**இளையராஜா :**

தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழினத்தின் பெருமைக்குரிய இசை மேதை. 'அன்னக்கிளி' என்ற திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகம் ஆனார். இவரின் பாடல்களைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும்.



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**இளையராஜாவின் இசைத் தொகுப்பு :**

இவர் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; பல ராகங்களுக்குத் திரையில் கொடுத்த அறிமுக மெட்டுகள் மெல்லிசையில் புதிய உயரங்களைத் தொட்டன.

அவரின் எப்படிப் பெயரிடுவேன் (How to Name it) என்னும் இசைத் தொகுப்பும் புல்லாங்குழல் இசைக் கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (Nothing But Wind) என்னும் இசைத் தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.

மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை உற்சாகம் வலி போன்ற மனித உணர்வுகளுக்கு இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம்" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார். மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார்.

'இராஜாவின் ரமண மாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத் தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்று பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

**இளையராஜாவின் இசை நுணுக்கம் :**

இவர் மேற்கத்திய இசை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். தமது தேடலின் மூலம் மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார். நான்கே இசைக் கருவிகளைக் கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார்.

ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர். சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்.

**ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரகுமான் :**

ஏ.ஆர். இரகுமான் 1992 ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கியவர்.

அவர் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை. பண்பாட்டுக் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார். இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழி பெயர்த்துக் காலப் பதாகையில் ஒலி வண்ணம் தீட்டினார். நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத் தரத்தில் இசையமைத்ததுடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார். இவர் இசையமைத்த 'வந்தே மாதரம்', 'ஜன கணமன' என்னும் இசைத் தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன.

இவர் இசையமைத்த "வந்தே மாதரம்" ஜன கண மன என்னும் இசைத்தொகுதிகள் நாட்டுப்பற்று உணர்வை வளர்ப்பன. வெவ்வேறு மொழித் திரைப்படத்திற்கும் இசையமைத்தவர். வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.

**முடிவுரை :**

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றியமையாத இடமுண்டு. அதில், இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோரின் வருகை புகழ் மகுடமாக ஒளிர்கின்றது. இதற்காகப் பல விருதுகளையும் பெற்று சாதனை படைத்திருக்கின்றனர். இசையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒப்பற்ற கலைஞர்களுக்கு நம் நன்றியுணர்வை என்றும் மறவாதிருப்போம்.

## கற்பவை கற்றபின்

**தமிழ்த்தாய் வாழ்த்து, நாட்டுப்பண், தமிழில் பிறந்தநாள் பாடல் போன்றவற்றை நண்பர்களுடன் இணைந்து இசையுடன் பாடிப் பயிற்சி பெறுக.**

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக**

1. **ஆஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?** மே 2022

அ) ஏ.ஆர். இரகுமான் ஆ) பாரதிராஜா இ) சித்ரா ஈ) இளையராஜா

விடை: அ) ஏ.ஆர். இரகுமான்

**2.** **ஆசியாவிலேயே முதன்முதலில் 'சிம்பொனி' என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் ......................** ஆகஸ்டு 2022

அ) எம்.எஸ். விஸ்வநாதன் ஆ) சங்கர் கணேஷ்

இ) ஏ.ஆர். இரகுமான் ஈ) இளையராஜா

**விடை: ஈ) இளையராஜா**

**3.** **'பால் நிலாப்பாதை' என்ற நூலை எழுதியவர் :** மார்ச் 2023

அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) இளையராஜா

இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா

**விடை: ஆ) இளையராஜா**

**4.** **'காற்றைத் தவிர ஏதுமில்லை' - என்ற இசைத்தொகுப்பினை உருவாக்கியவர்** அரை.தேர்வு 2023

அ) இளையராஜா ஆ) ஏ.ஆர். இரகுமான்

இ வித்யாசாகர் ஈ) எம்.எஸ்.விஸ்வநாதன்

**விடை: அ) இளையராஜா**

**5.** **திரை இசையில் ஏ.ஆர்.ரகுமான் அறிமுகப்படுத்திய இசையின் பெயர் ................** மு.திருப்புதல் தேர்வு 2024

அ) கல்யாணி ஆ) சூஃபி இ) பஞ்சமுகி ஈ) சிந்துபைரவி

**விடை: ஆ) சூஃபி**

**6.** **கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.** மார்ச் 2024

| | | | |
|---|---|---|---|
| (1) தஞ்சை பெரிய கோயில் | - | (i) | திருச்சாழல் |
| (2) சிங்கன் சிங்கி | - | (ii) | காலத்தை வென்ற கலை |
| (3) பெண்கள் விளையாட்டு | - | (iii) | இசைத் தமிழர் இருவர் |
| (4) சிம்பொனித் தமிழர் | - | (iv) | குற்றாலக் குறவஞ்சி |

அ) (1) - (iv), (2) - (ii), (3) - (i), (4) - (iii)

ஆ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

இ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

ஈ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

**விடை: ஆ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)**

## நெடுவினா

**1.** **சிம்பொனித் தமிழரின் சிறப்புகளை விரிவாக எழுது. அவர் இசைத்தமிழுக்கு ஆற்றியத் தொண்டுகள், விருதுகள் பற்றி குறிப்பிடுக.** செப். 2020

### சிம்பொனித் தமிழர்

**முன்னுரை :** சிம்பொனித் தமிழர் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வதே நம் முக்கிய நோக்கமாகும்.

**சிம்பொனித் தமிழர் இளையராஜா :** ஆசியக் கண்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு சிம்பொனி இசைக்கோவையை உருவாக்கும் திறன் கைவராது என்பது மேற்கத்திய இசை வல்லுநர்களின் கருத்தோட்டமாகும். இந்த கற்பனை வாதத்தை உடைத்து ராயல்ஃபில் ஹார்மோனிக் இசைக் குழுவுக்கு சிம்பொனி இசைக் கோலத்தை அமைத்துக் காட்டியவர் மாஸ்ட்ரோ இளையராஜா.

அவர், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழினத்தின் பெருமைக்குரிய இசை மேதை. 'அன்னக்கிளி' என்ற திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகம் ஆனார். இவரின் பாடல்களைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும்.

**இசைத் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் :**

இவர் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; பல ராகங்களுக்குத் திரையில் கொடுத்த அறிமுக மெட்டுகள் மெல்லிசையில் புதிய உயரங்களைத் தொட்டன. அவரின் "எப்படிப் பெயரிடுவேன்?" (How to Name it) என்னும் இசைத் தொகுப்பும் புல்லாங்குழல் இசைக் கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (Nothing but Wind) என்னும் இசைத் தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.

மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை உற்சாகம் வலி போன்ற மனித உணர்வுகளுக்கு இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம்" என்னும் ஆவணக் குறும் படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார். மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார். 'இராஜாவின் ரமண மாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத் தொகுப்புகளையும், கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.

ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்று பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். 'பஞ்சமுகி' என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

**இளையராஜாவின் இசை நுணுக்கம் :**

இவர் மேற்கத்திய இசை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். தமது தேடலின் மூலம் மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார். நான்கே இசைக் கருவிகளைக் கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார். ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர். சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்.

**இளையராஜா பெற்ற விருதுகள் :**

இந்திய அரசிடமிருந்து பத்மவிபூஷண் விருது, சிறந்த இசையமைப்பாளருக்கான விருது, சிறந்த பின்னணி இசைக்கான விருது ஆகியவற்றை பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது, மத்திய பிரதேச அரசின் லதா மங்கேஷ்கர் விருது, கேரள அரசின் நிஷாகாந்தி சங்கீத விருது ஆகியவற்றையும் இவர் பெற்றுள்ளார்.

**முடிவுரை :**

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றியமையாத இடமுண்டு. அதில், இளையராஜாவின் இசைப்பணி, புகழ் மகுடமாக ஒளிர்கின்றது.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கலைகளின் மகுடம் ..............**

அ) நாடகம் ஆ) நூல்கள் இ) இசை ஈ) பாடல்

**2. ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு சிம்பொனி இசைக் கோலத்தை அமைத்துக் காட்டியவர்**

அ) இளையராஜா ஆ) ஏ.ஆர். இரகுமான் இ) சங்கர் கணேஷ் ஈ) யுவன் சங்கர்

**3. இளையராஜாவின் இயற்பெயர் ..............**

அ) முத்தையா ஆ) இராசையா இ) எத்திராசலு ஈ) வரதராஜன்

**4. திரைப்பாடல்களைச் செவியுணர் கனிகளாகவும் பண்பாட்டு வெளிப்பாடாகவும் மாற்றிய பெருமைக்குரியவர்..............**

அ) இளையராஜா ஆ) ஏ.ஆர். இரகுமான் இ) யுவன் சங்கர் ஈ) எம். எஸ். விஸ்வநாதன்

**5. மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என இளையராஜா வெளிப்படுத்திய படம் ..............**

அ) அன்னக்கிளி ஆ) ஸ்லம்டாக் மில்லியனர் இ) நூறாவது நாள் ஈ) இந்தியா 24 மணிநேரம்

**6. இளையராஜா உருவாக்கிய கர்நாடகச் செவ்வியல் ராகம் ..............**

அ) பஞ்சமுகி ஆ) ஆனந்த பைரவி இ) இந்தளம் ஈ) கல்யாணி

**7. .............. என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப் பாவில் காணப்படுகிறது.**

அ) தோடி ஆ) சாளரபாணி இ) பியந்தை ஈ) காந்தாராம்

**8. "வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது" என்ற நூல்களை எழுதியவர்** ...............

அ) அப்துல் ரகுமான் ஆ) இளையராஜா இ) ஆத்மாநாம் ஈ) பிரமிள்

**9. மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடல்** ...............

அ) நம் ரதா கே சாகர் ஆ) வந்தே மாதரம்
இ) அமிர் தோமர் பிரேம கபோ ஈ) ஜன கண மன

**10. ஏ.ஆர். இரகுமானுக்கு இந்திய அரசு வழங்கிய விருது.............**

அ) லதா மங்கேஷ்கர் ஆ) தங்கப் பதக்கம் இ) கலைமாமணி ஈ) பத்ம பூஷண்

**11. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | கீதாஞ்சலி | - 1. | செவ்வியல்ராகம் |
| ஆ) | மூகாம்பிகை | - 2. | தமிழ் இசைத்தொகுப்பு |
| இ) | மீனாட்சி ஸ்தோத்திரம் | - 3. | பக்தி இசைத் தொகுப்பு |
| ஈ) | பஞ்சமுகி | - 4. | பக்திப்பாடல் |

அ) 2, 3, 4, 1 ஆ) 2,4, 1, 3 இ) 3, 1, 2, 4 ஈ) 3, 2, 1, 4

12. பொருந்தாத இணையைத் தேர்க.
அ) எப்படி பெயரிடுவேன் - இசைத் தொகுப்பு
ஆ) இந்தியா 24 மணி நேரம் - ஆவணக் குறும்படம்
இ) பஞ்சமுகி - இசை வடிவம்
ஈ) நம்ரதா கே சாகர் - மகாத்மா காந்தி

13. பிங்கல நிகண்டு என்னும் நூலில்..........பண்புகள் காணப்படுகின்றன.
அ) 100 ஆ) 101 இ) 103 ஈ) 107

14. தேவாரத்தில் ........பண்களில் பாடல்கள் உள்ளன.
அ) 23 ஆ) 103 இ) 38 ஈ) 32

15. ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படும் பண்........
அ) நைவளம் ஆ) சாளரபாணி இ) அந்தாளி ஈ) கல்வாணம்

16. இளையராஜா பிறந்த மாவட்டம்........
அ) மதுரை ஆ) வேலூர் இ) திருநெல்வேலி ஈ) தேனி

17. இளையராஜா இசை அமைப்பாளராக அறிமுகமான படம்........
அ) ரோஜா ஆ) பத்ரகாளி இ) அன்னக்கிளி ஈ) 16வயதினிலே

18. ஐ வகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளை இசைத்தவர்.......
அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) எவருமில்லை இ) எம்.எஸ்.வி ஈ) இளையராஜா

19. மாணிக்கவாசகர் இயற்றியது ............
அ) திருவாசகம் ஆ) திருப்பாவை இ) திருமந்திரம் ஈ) திருவெம்பாவை

20. ஆரட்டோரியோ என்ற இசைவடிவில் இளையராஜா இசையமைத்த நூல்........
அ) திருப்பாவை ஆ) திருவாசகம் இ) திருமந்திரம் ஈ) திருவாய்மொழி

21. இளையராஜா கன்னடமொழியில் வெளியிட்ட இசைத் தொகுப்பு.........
அ) ரமணமாலை ஆ) கீதாஞ்சலி இ) திருவாசகம் ஈ) மூகாம்பிகை

22. பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகத்தை உருவாக்கியவர்.......
அ) இளையராஜா ஆ) விஸ்வநாதன் இ) ஏ.ஆர்.ரகுமான் ஈ) ராமமூர்த்தி

23. ஏ.ஆர். ரகுமான் ஆஸ்கார் விருது பெற்ற ஆண்டு........
அ) 2011 ஆ) 2010 இ) 2009 ஈ) 2012

24. கலிப்பாவிற்குரிய ஓசை ............
அ) துள்ளல் ஆ) செப்பல் இ) தூங்கல் ஈ) அகவல்

25. பொருத்துக.
i. பத்ம விபூஷண் விருது - 1. கேரளம்
ii. கலைமாமணி - 2. மத்தியப் பிரதேசம்
iii. லதா மங்கேஷ்கர் விருது - 3. தமிழ்நாடு
iv. நிஷாகாந்தி சங்கீத விருது - 4. இந்திய அரசு
அ) 4,3,2,1 ஆ) 3,2,4,1 இ) 2,1,4,3 ஈ) 4,3,1,2

26. 'ஸ்லம்டாக் மில்லியனர்' திரைப்படத்தின் இசைக்காக ஏ.ஆர். இரகுமான் பெற்ற விருது.........
அ) கிராமி ஆ) கோல்டன் குளோப் இ) ஆஸ்கார் ஈ) கலைமாமணி

27. பொருத்துக.
i. தங்கப் பதக்கம் - 1. ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகம்
ii. ஆவாத் சம்மான் - 2. தமிழ்நாடு
iii. கலைமாமணி - 3. கேரளா
iv. சர்வதேச இசை விருது - 4. உத்திரப்பிரதேசம்
அ) 4,3,1,2 ஆ) 1,2,3,4 இ) 3,4,2,1 ஈ) 3,2,4,1

28. இளையராஜாவிற்கு தமிழ்நாடு அரசு வழங்கிய விருது.............
அ) பத்ம விபூஷண் விருது ஆ) நிஷாகாந்தி சங்கீத விருது
இ) கலைமாமணி ஈ) தங்கப் பதக்கம்


enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

விடைகள் :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இ) | இசை | 2. | அ) | இளையராஜா | 3. | ஆ) இராசையா |
| 4. | அ) | இளையராஜா | 5. | ஈ) | இந்தியா 24 மணிநேரம் | | |
| 6. | அ) | பஞ்சமுகி | 7. | ஆ) | சாளரபாணி | 8. | ஆ) இளையராஜா |
| 9. | அ) | நம் ரதா கே சாகர் | 10. | ஈ) | பத்ம பூஷண் | | |
| 11. | அ) | 2, 3, 4, 1 | 12. | இ) | பஞ்சமுகி – இசை வடிவம் | | |
| 13. | இ) | 103 | 14. | அ) | 23 | 15. | ஆ) சாளரபாணி |
| 16. | ஈ) | தேனி | | | | | |
| 17. | இ) | அன்னக்கிளி | 18. | ஈ) | இளையராஜா | 19. | அ) திருவாசகம் |
| 20. | ஆ) | திருவாசகம் | 21. | ஈ) | மூகாம்பிகை | | |
| 22. | அ) | இளையராஜா | 23. | இ) | 2009 | 24. | அ) துள்ளல் |
| 25. | அ) | 4,3,2,1 | 26. | ஆ) | கோல்டன் குளோப் | 27. | இ) 3,4,2,1 |
| 28. | இ) | கலைமாமணி | | | | | |

## குறுவினா

**1. இளையராஜாவின் பன்முகங்களை எழுதுக.**

இளையராஜா இசைக்கலைஞர், சிறந்த ஒளிப்படக் கலைஞர், கவிஞர், பாடகர், 'பால்நிலாப் பாதை', 'வெட்ட வெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளர் எனப் பன்முகங்களைக் கொண்டவர்.

**2. திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்களை எழுதுக.**

**திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள் :** நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம் ஆகியவை. சாளரபாணி என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

☆☆☆

www.surabooks.com

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி, கலை

# மொழி முதல், இறுதி எழுத்துகள்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.** ஜூன் 2019, கா.தேர்வு 2019, மார்ச் 2020 & 2024, செப்.2021, தி.தேர்வு & மே 2022

அ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்
இ) கடல் + அலை – உயிர் + மெய் ஈ) மண் + வளம் – மெய் + மெய்

**விடை: (இ) கடல் + அலை – உயிர் + மெய்**

**2. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?** மு.ப.இடைத்தேர்வு 2018, அ. தேர்வு 2019; ஜூன் 2023

(i) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் – 22.
(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.
(iii) மெய்களில் க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் உயிர்மெய் வடிவங்களாக வரும்.

**3. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.** மு.ப.இடைத்தேர்வு 2018, மார்ச் 2024

(i) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் – 24.
(ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.
(iii) மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
(iv) குற்றியலுகரம் ஒன்று.
எ.கா. : பல, பலா, கரி, தீ, கொடு, பூ, சே, நகை, நொ, கோ, கௌ, உரிஞ், கண், வெறிந், அறம், பொன், தாய், பார், கால், தெவ், வாழ், கேள்.

**4. உயிரீறு, மெய்யீறு – விளக்குக.** மார்ச் 2020,23

(i) **உயிரீறு:** நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது 'உயிரீறு' எனப்படும். எ.கா. : மணி[ண் + இ] + மாலை = மணிமாலை. – உயிரீறு.
(ii) **மெய்யீறு:** நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்.
எ.கா. : பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு.

**5. உயிர்முதல், மெய்ம்முதல் – எடுத்துக்காட்டுடன் விவரிக்க.** மே 2022

(i) **உயிர்முதல்:** வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும். எ.கா. : வாழை + இலை = வாழையிலை – உயிர்முதல்.
(ii) **மெய்முதல்:** வருமொழியின் முதலெழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்ம்முதல் எனப்படும். எ.கா. : தமிழ் + நிலம் (ந் + இ) = தமிழ் நிலம் – மெய்ம் முதல்.

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

### பலவுள் தெரிக

**5. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.** காலா. தேர்வு 2024

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

**விடை: அ) அன்னம், கிண்ணம்**

### குறுவினா

**4. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் – இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?** ஆகஸ்டு 2022

(i) உயிரெழுத்து = உயிர் + எழுத்து – நிலைமொழியின் ஈற்றெழுத்து – ர் – மெய்யீறு
(ii) பன்னிரண்டு = பத்து + இரண்டு – நிலைமொழியின் ஈற்றெழுத்து – (து–த்+உ) உ– உயிரீறு
(iii) திருக்குறள் = திரு + குறள் – நிலைமொழியின் ஈற்றெழுத்து – (ரு–ர்+உ) உ– உயிரீறு
(iv) நாலடியார் = நான்கு + அடியார் – நிலைமொழியின் ஈற்றெழுத்து – (கு–க்+உ) உ– உயிரீறு.



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**சிறுவினா**

5. **மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.** கா.தேர்வு 2023

**மொழி முதல் எழுத்துகள் – 22 :** உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் முதலில் வரும். மெய்யெழுத்துகள் மெய்வடிவிலேயே சொல்லுக்கு முதலில் வருவதில்லை. அவை உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் வடிவிலேயே மொழிக்கு முதலில் வருகின்றன. மெய்களில் க,ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து வரிசைகள் சொல்லின் முதலில் வரும். (ஙனம் என்னும் சொல்லில் மட்டுமே ங வரும்).

எ.கா. : (i) அம்மா, ஆடு, இலை, ஈட்டி, உடை, ஊர், எடு, ஏர், ஐயம், ஒன்று, ஓணான், ஔவை.

(ii) கண்ணன், சந்தம், தண்ணீர், நண்டு, படை, மலை, வயல், யவனர், ஞமலி, ஙனம் (விதம்)

**மொழி இறுதி எழுத்துகள் – 24 :** உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும். மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லின் இறுதியில் வரும். பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக் கொள்வர்.

எ.கா. : (i) பல, வினா, கரி, தீ, கடு, பூ, மேலே தை, நொ, போ, கௌ – உயிர்மெய்யோடு கூடி இறுதியில் வந்தது.

(ii) உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள் – மெய்யெழுத்துக்கள் இறுதியில் வந்தன. எஃகு, இருபஃது – குற்றியலுகரம் இறுதியில் வந்தது.

## கற்பவை கற்றபின்

**உங்கள் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் பெயர்கள் சிலவற்றின் முதல், இறுதி எழுத்துகளைத் தனித்து எழுதி நீங்கள் பயின்ற இலக்கணப் பகுதியுடன் ஒப்பிட்டு ஆய்க.**

மாணவர்களின் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 1. | கண்ணன் – | க – | மொழி முதல் எழுத்து |
| | | ன் – | மொழி இறுதி எழுத்து |
| 2. | இலக்கியா – | இ – | மொழி முதல் உயிர் எழுத்து |
| | | யா – | மொழி முதல் உயிர்மெய் எழுத்து |
| 3. | கோவர்மா – | கோ – | மொழி முதல் உயிர்மெய் எழுத்து |
| | | மா – | மொழி முதல் உயிர்மெய் எழுத்து |
| 4. | மணிமொழி – | ம – | மொழி முதல் உயிர்மெய் எழுத்து |
| | | ழி – | மொழி இறுதி எழுத்து |

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக**

1. **மொழி முதல் எழுத்துகள்** அரை. தேர்வு 2023, மார்ச் 2024

அ) 24 ஆ) 22 இ) 12 ஈ) 18 விடை: ஆ) 22

2. **தமிழ் + அன்னை – சொற்புணர்ச்சியில் எழுத்துகள் சந்திக்கும் முறை ..............** மு.ப.இடைத்தேர்வு 2018

அ) உயிர் + உயிர் ஆ) மெய் + மெய் இ) மெய் + உயிர் ஈ) உயிர் + மெய்

விடை: இ) மெய் + உயிர்

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **குற்றியலுகரம் ........................ வகைப்படும்.**

அ) பதினொன்று ஆ) பத்து இ) ஆறு ஈ) பன்னிரண்டு

2. **சார்பெழுத்துகளுள் ............ சொல்லின் முதலிலோ இறுதியிலோ வராது.**

அ) உயிர்மெய் ஆ) குற்றியலுகரம் இ) ஆய்தம் ஈ) குற்றியலிகரம்

3. **இலக்கண வகையால் சொற்கள் ................. வகைப்படும்.**

அ) நான்கு ஆ) ஆறு இ) மூன்று ஈ) இரண்டு

4. **பொருத்துக.**

அ) வீடில்லை - 1. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
ஆ) மார்புக் கூடு - 2. உயிர்தொடர்க் குற்றியலுகரம்
இ) எஃகுக் கம்பி - 3. நெடில்தொடர்க் குற்றியலுகரம்
ஈ) முரட்டுக்காளை - 4. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 1, 4, 2

5. **நால்வகைச் சொற்களுள் பெயரையும் வினையையும் சார்ந்து வருவன............ , ................. சொற்கள்.**

அ) பெயர், வினை ஆ) இடை, உரி இ) பெயர், உரி ஈ) இடை, வினை

6. **அச்சுப் பலகை - எவ்வகை குற்றியலுகரம்?**

அ) வன்தொடர்க் குற்றியலுகரம் ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
இ) மென்தொடர்க் குற்றியலுகரம் ஈ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

7. **நடந்து + செல் சொற்களின் அடிப்படையில் புணர்ச்சி ............**

அ) பெயர் + பெயர் ஆ) வினை + வினை இ) பெயர் + வினை ஈ) வினை + பெயர்

8. **எழுத்துகளின் அடிப்படையில் புணர்ச்சியைப் பொருத்துக.**

அ) உயிர் + உயிர் - 1. தமிழ் + அன் னை
ஆ) மெய் + உயிர் - 2. மலை + அருவி
இ) மெய் + மெய் - 3. தென்னை + மரம்
ஈ) உயிர் + மெய் - 4. தேன் + மழை

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 1, 3, 2 இ) 2, 1, 3, 4 ஈ) 2, 1, 4, 3

9. **இன்றைய வழக்கில் சொல்லுக்கு இறுதி எழுத்தாக வராதவை எவை?**

அ) ஞ், ந், வ் ஆ) க், ச், ப் இ) ஞ், ம், ய் ஈ) ல், ன், ண்

10. **உயிரீறு - எடுத்துக்காட்டைத் தேர்க.**

அ) பொன்வண்டு ஆ) மணிமாலை இ) தமிழ்நிலம் ஈ) தேன்மழை

11. **தமிழ்ச்சொற்கள் எவை என்பதைத் தெரிக?**

அ) பாவை, ராக்கி ஆ) காவிரி, டப்பா இ) பாவை, காவிரி ஈ) டமாரம், றெக்கை

12. **சுட்டெழுத்துகள் எவை?**

அ) எ, யா, ஆ ஆ) க, ச, த, ப இ) ஆ, உ, யா ஈ) அ, இ, உ

13. **தற்போது வழக்கில் இல்லாத சொல் எது?**

அ) யாங்ஙனம் ஆ) எங்ஙனம் இ) இங்ஙனம் ஈ) உங்ஙனம்

14. **வினா எழுத்துகள் எவை?**

அ) எ, யா ஆ) ஆ, ஓ இ) அ, இ, உ ஈ) ஙு, யா

15. **மெய்களில் 'ங' என்ற எழுத்து ................... சொல்லில் மட்டுமே வரும்.**

அ) ஙான்று ஆ) ஙவில் இ) ஙனம் ஈ) ஙங்கு

16. **சொல்லில் முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் எத்தனை?**

அ) 24 ஆ) 10 இ) 26 ஈ) 12

17. **சொல்லில் இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?**

அ) 24 ஆ) 22 இ) 26 ஈ) 10

18. **நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் ............... என்பர்.**

அ) நிலைமொழி ஆ) மெய்யீறு இ) உயிரீறு ஈ) புணர்ச்சி

19. **நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது ...............**

அ) உயிரீறு ஆ) மெய்யீறு இ) புணர்ச்சி ஈ) வருமொழி

விடைகள் :
1. இ) ஆறு
2. இ) ஆய்தம்
3. அ) நான்கு
4. ஈ) 3, 1, 4, 2
5. ஆ) இடை, உரி
6. அ) வன்தொடர்க் குற்றியலுகரம்
7. ஆ) வினை + வினை
8. ஈ) 2, 1, 4, 3
9. அ) ஞ், ந், வ்
10. ஆ) மணிமாலை
11. இ) பாவை, காவிரி
12. ஈ) அ, இ, உ
13. ஈ) உங்ஙனம்
14. அ) எ, யா
15. இ) ஙனம்
16. ஆ) 10
17. அ) 24
18. ஈ) புணர்ச்சி
19. ஆ) மெய்யீறு


enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**குறுவினா**

**1. 'ங்' என்னும் மெய்யெழுத்து வரும் இடங்கள் யாவை?**

(i) 'ங்' என்னும் மெய்யெழுத்து 'விதம்' எனப் பொருள் தரும். 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராமல் அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்தே வரும்.

(ii) எ.கா. அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்பன.

**2. 'உங்ஙனம்' – சொல் குறித்து விளக்குக.**

(i) உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை.

(ii) ஆனால் தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(iii) இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**3. புணர்ச்சி என்றால் என்ன?**

(i) சொல்லைப் பிரிக்கும்போது முதலில் நிற்கும் சொல்லை 'நிலைமொழி' என்றும் அதனோடு வந்து சேரும் சொல்லை 'வருமொழி' என்றும் அழைப்பர்.

(ii) இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்பர்.

**4. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் அவை யாவை?**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை

(i) நெடில் தொடர்க் குற்றியலுகரம் (ii) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

(iii) வன் தொடர்க் குற்றியலுகரம் (iv) மென் தொடர்க் குற்றியலுகரம்

(v) இடைத் தொடர்க் குற்றியலுகரம் (vi) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

## மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்**


மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் (1815 – 1876)

தமிழ் இலக்கிய வரலாற்றில், 'புலமைக் கதிரவன்' எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள **அதவத்தூர்** என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார். அவர் இயற்றிய **சேக்கிழார் பிள்ளைத்தமிழ்** என்ற நூல் இவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே. சாமிநாதர், தியாகராசர், குலாம் காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

**1. தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் – இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**

புலமைக் கதிரவன் – உருவகத்தொடர்

**2. மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

(i) தேனுண்ணும் வண்டு போல் – உவமைத்தொடர்

(ii) புலமைக் கதிரவன் – உருவகத்தொடர்

**3. மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் – விடைக்கேற்ற வினாவை அமைக்க.** அ.மா.வி 2018

தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

**4. பத்தியில் மொழி முதல் எழுத்துகளைக்கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.**

(i) புராணங்கள் (ii) மகாவித்துவான் (iii) யமக அந்தாதி

(iv) திரிபந்தாதி (v) கலம்பகம்.



www.surabooks.com

5. **விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

விளங்கினார் = விளங்கு + இன் + ஆர்
விளங்கு - பகுதி
இன் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

## தமிழாக்கம் தருக

1. The Pen is mightier than the Sword. கா.தேர்வு 2018, ஜூன் 2019, தி. தேர்வு 2022, மார்ச் 2025

**விடை:** கத்தி முனையைவிட பேனாமுனை கூர்மையானது.

2. Winners don't do different things, they do things differently. மே 2022

**விடை:** வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்யாமல், செய்வதையே வித்தியாசமாக செய்ய முயற்சிப்பார்கள்.

3. A picture is worth a thousand words. ஜூன் 2019, தி. தேர்வு & மே 2022

**விடை:** ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. Work while you work and play while you play. மார்ச், கா.தேர்வு 2019, தி.தேர்வு 2022, மார்ச் 2025

**விடை:** வேலை செய்யும்போது வேலையில் கவனம் வை! விளையாடும்போது விளையாட்டில் கவனம் வை!

5. Knowledge rules the world. கா.தேர்வு 2019, தி.தேர்வு 2022

**விடை:** அறிவே உலகை ஆள்கிறது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| வாடகை | குடிக்கூலி | நிச்சயம் | உறுதி |
| சம்பளம் | ஊதியம் | தேசம் | நாடு |
| விசா தி.தேர்வு 2022 | நுழைவிசைவு, நுழைவாணை | பத்திரிகை | செய்தித்தாள் |
| ராச்சியம் | ஆட்சி | சொந்தம் கா.தேர்வு 2024 | உரியது(தனக்குரியது) |
| மாதம் | திங்கள் | உத்திரவாதம் | பொறுப்பு, பிணை |
| ஞாபகம் | நினைவு | வித்தியாசம் மு.திருப்புதல் தேர்வு 2024 | வேறுபாடு |
| பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு | கோரிக்கை | வேண்டுகோள் |
| சரித்திரம் மு.திருப்புதல் தேர்வு 2024 | வரலாறு | சமீபம் | அண்மை |
| போலீஸ் தி.தேர்வு 2022 | காவலர் | சந்தோஷம் அரையாண்டுத் தேர்வு 2019 | மகிழ்ச்சி |
| வருடம் கா.தேர்வு 2024 | ஆண்டு | உற்சாகம் | மன எழுச்சி, ஊக்கம் |
| கம்பெனி | குழுமம் | யுகம் | காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று |
| முக்கியத்துவம் | இன்றியமையாமை | தருணம் | தக்க சமயம் |

**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

நிகழ்ச்சி நிரல்

"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)

| நேரம் : 2.30 பிற்பகல் | இடம்: அரசு மேல்நிலைப் பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை– மாணவர் இலக்கியச்செல்வன் |


enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com



| | |
|---|---|
| 2.40 | தலைமையுரை – திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை – கவிஞர் வாணி |
| "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" | |
| 3.45 | நன்றியுரை – மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

**விடை:**

## திங்கள் கூடுகை

அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை வேளச்சேரியில் 'அரியன கேள் புதியன செய்' என்ற தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி வரும் ஞாயிற்றுக் கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது. மாணவ – மாணவியர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகின்றனர். மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்துகிறார். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எழிலன் தலைமையுரை நிகழ்த்துகிறார். 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்ற தலைப்பில் கவிஞர் வாணி சிறப்புரையாற்ற உள்ளார். நன்றியுரையை மாணவர் ஏஞ்சலின் நிகழ்த்துகிறார். அனைவரும் நாட்டுப்பண்ணைச் சேர்ந்து பாட கூட்டம் நிறைவு பெறுகிறது.

**அனுப்புநர்:**

இரா. பார்த்த சாரதி,
தலைவர், மாணவர் மன்றம்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
வேளச்சேரி,
சென்னை - 42.

**பெறுநர்:**

உயர்திரு. முதன்மையாசிரியர் அவர்கள்,
தினத்தந்தி நாளிதழ்,
எழும்பூர், சென்னை - 7

**பொருள் :** நாளிதழில் செய்தி இடம் பெறவேண்டி விண்ணப்பித்தல்.

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம்.

எங்கள் அரசு மேனிலைப் பள்ளியில், திங்கள் கூடுகை நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில் "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" எனும் தலைப்பில் பேச வருகை தரும் அன்பு உள்ளங்களை தங்கள் தினத்தந்தி நாளிதழ் வாயிலாக வரவேற்பு நடத்தவும் அந்த நிகழ்ச்சிகளை நாளிதழ் வாயிலாகத் தெரிவிக்கவும் விரும்புகிறேன். அருள் கூர்ந்து எங்கள் பள்ளி சார்பில் நடத்தும் நிகழ்ச்சி நிரலினைத் தங்கள் நாளிதழில் செய்தியாக இடம்பெற ஆவன செய்யுமாறு எங்கள் பள்ளி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

**இடம் :** சென்னை, இப்படிக்கு,
**நாள் :** 15.06.2021. இரா. பார்த்த சாரதி.

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்று பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' – தொ. பரமசிவன்)



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**
தமிழ் என்ற சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள்: இனிமை, பண்பாடு, அகப்பொருள், அழகு, கலைப்புலமை, மென்மை போன்றனவாகும்.

**2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**
(i) அதூஉம் – இசைநிறையளபெடை / செய்யுளிசை அளபெடை
(ii) தழீஇய – சொல்லிசையளபெடை.

**3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**
தமிழ் என்றவுடன் நம் மனதில் தோன்றுவது. தமிழின் இனிமை, எளிமை, புதுமை. தமிழ்மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்கள்.

**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**
திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் 'தமிழ்மாலை'.

**5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**
தமிழின் பெருமை.

### பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

**அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.**
காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.

**ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.**
முயற்சி செய்தால் அதற்கேத்த பலன் வராமல் போகாது.


**இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்தை மாத்தனும்.**
காலத்திற்கு ஏற்ற மாதிரிப் புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்றவேண்டும்.

**ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.**
ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

**உ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்.**
தேர்வெழுத வேகமாக போங்கள், நேரங்கழித்து போனால் பதற்றமாகிவிடும்.

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



**குழாயில் சொட்டும் நீரைக் குடிக்கும் பறவையின் பரிதாப நிலை:**
விலங்கினங்களின் நீராதாரமான ஏரி, குளங்களில் நீர் இல்லாமையே இதற்குக் காரணம். மக்கள் தங்கள் தேவைகளுக்கு மரங்களை வெட்டினர். மழை பருவநிலை மாறி பெய்கிறது. இதனால் உயிரினங்களுக்குத் தேவையான நீரும் இல்லை. பறவைகள் தங்குவதற்கு மரங்கள் இல்லை. நீர் நிலைகளில் நீர் இல்லை. வயல்களில் பயிர் சாகுபடி இல்லை. அதனால் பறவைகளின் இரையான புழு பூச்சிகளும் இல்லை. நீரின்றி மக்களும் அவதிப்படுகின்றனர். உயிரினங்களும் அவதிக்குள்ளாகிவிட்டன. இதன் வெளிப்பாடே இப்புகைப்படம்.

**2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**
(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில். கா. தேர்வு 2019, தி.தேர்வு 2022, மார்ச் 2023
அ) மயில் ஓர் அழகான பறவை
ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.**

அ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

ஆ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

**ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை** மார்ச் 2020, 2025

அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.**

அ) பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.

ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

**iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?** ஜூன் 2019

அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?

ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை தெரியுமா?

**3. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர். (3)

**விடை:** அண்ணா

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர். (10)


**விடை:** கல்யாண சுந்தரனார்

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர். (6)

**விடை:** பாரதிதாசன்

ஈ) பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர். (2)

**விடை:** ஜீவா.




**4. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

**அ) வா** மார்ச் 2023, அரை.தேர்வு 2023

வா* – வேர்ச்சொல்

அருணா வீட்டுக்கு **வந்தாள்.** **(வினைமுற்று)**

அங்கு **வந்த** பேருந்தில் அனைவரும் ஏறினர். **(பெயரெச்சம்)**

கருணாகரன் மேடையில் **வந்து** நின்றார். **(வினையெச்சம்)**

என்னைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர். **(வினையாலணையும் பெயர்)**

**ஆ) பேசு** – வேர்ச்சொல்

கண்ணன் நன்றாகப் **பேசினான்.** **(வினைமுற்று)**

மேடையில் **பேசிய** கண்ணனை அனைவரும் பாராட்டினர். **(பெயரெச்சம்)**

குழந்தை நினைத்தவற்றையெல்லாம் **பேசி** முடித்தது. **(வினையெச்சம்)**

“வானொலியில் **பேசியவர்** யார்?” என்று அண்ணன் தம்பியிடம் கேட்டான். **(வினையாலணையும் பெயர்)**

**இ) தா** – வேர்ச்சொல் மார்ச் 2024

வேல்விழி கயல்விழிக்குப் புத்தகம் **தந்தாள்.** **(வினைமுற்று)**

வேல்விழி **தந்த** புத்தகம் கயல்விழிக்குப் பிடித்திருந்தது **(பெயரெச்சம்)**

தலைமையாசிரியர் சான்றிதழ்களைத் **தந்து** முடித்தார். **(வினையெச்சம்)**

தானமாகப் பொருட்களைத் **தந்தவர்** மகிழ்ந்தார். **(வினையாலணையும் பெயர்)**

**ஈ) ஓடு** – வேர்ச்சொல்

மாணவர்கள் வேகமாக **ஓடினர்.** **(வினைமுற்று)**

வேகமாக **ஓடிய** மாணவன் வெற்றி பெற்றான். **(பெயரெச்சம்)**

குமரன் வேகமாக **ஓடி** விழுந்தான். **(வினையெச்சம்)**

மெதுவாக **ஓடியவர்** தோற்றார். **(வினையாலணையும் பெயர்)** அரையாண்டுத் தேர்வு 2018

காலாண்டுத் தேர்வு 2019

உ) **பாடு** – வேர்ச்சொல்
கீதா பாட்டுப் **பாடினாள். (வினைமுற்று)**
பாட்டுப் **பாடிய** கீதா நடனமும் ஆடினாள். **(பெயரெச்சம்)**
கீதா பாட்டுப் **பாடி** முடித்தாள். **(வினையெச்சம்)**
வகுப்பில் **பாடியவள்** அனைவராலும் பாராட்டப்பட்டாள். **(வினையாலணையும் பெயர்)**

## செய்து கற்போம்

**1. தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் செய்திகள், கவிதைகள், படங்களைச் சேகரித்து எட்டுப் பக்க அளவில் தொகுப்பேடு உருவாக்குக.**

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் செய்திகள்:**

(i) உலக மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் எனத் தமிழ் வரலாறு எனும் நூலில் மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இயல்பாகத் தோன்றிய இயன்மொழியான நம் தமிழ் மொழிக்குப் பதினாறு பண்புகள் உள்ளன.

(ii) நம் தமிழ்மொழி பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் பாவாணர். தொன்மை, முன்மை, எளிமை, ஒன்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை – இவை பாவாணர் கூறிய செவ்வியல் பண்புகள் ஆகும்.

(iii) உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழியில் மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர்.

(iv) பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் எனும் நூல்வழி அறியலாம். அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ். அக்கால மக்கள் வீரவாழ்க்கையும் கொடைச் சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாக திகழ்வது பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகும்.

(v) தமிழில் அறநூல்கள் ஏராளமாக உள்ளன. தேடினாலும் திருக்குறள் போல வேறு மொழிகளில் அறநூலுண்டோ? மனதை நெகிழ்வித்து உருக்குவதற்குத் தேவார திருவாசகம் தமிழில் வைரமாக ஒளிர்கின்றன. வேற்றுமொழிகளில் இல்லாத அளவிற்குத் தொல்காப்பியம் தொடங்கி இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்ந்திருக்கின்றன. ‘இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்’– என்று ‘பிங்கலந்தை’ என்னும் நிகண்டு நூல் கூறுகிறது. ‘தமிழ்’ என்னும் சொல்லின் பொருள் இனிமை, எளிமை, நீர்மை என்பதாகும். தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும்.

(vi) தமிழில் ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளையும் சிறப்பெழுத்துகள் என நற்றமிழ் இலக்கணம் எனும் நூலில் டாக்டர் சொ. பரமசிவம் குறிப்பிடுகிறார். ற, ன, ழ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துகளுள் ‘ழ’ வைத் தவிர்த்து பிற நான்கும் பிற திராவிட மொழிகளிலும் உலக மொழிகளிலும் காணப்படுகின்றன.

(vii) ‘ழ’ கரம் தமிழைத் தவிர்த்து திராவிட மொழியான மலையாள மொழியிலும் உலக மொழிகளுள் பிரெஞ்சு மொழியிலும் மட்டுமே உள்ளது. தமிழ்மொழி இன்றளவும் பேச்சளவிலும் ஏட்டளவிலும் உள்ள கன்னித் தமிழாக அழியாமல் இருக்கின்றது. தமிழின் இனிமையைப் பாராட்டாத இலக்கியங்களே இல்லை.

கம்பராமாயணம், ‘என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்’

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” – பாரதியார்

(viii) “தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்” – பாரதிதாசன் தமிழின் சிறப்பை உணர்ந்த மேலை நாட்டறிஞர் டாக்டர் ஜி.யு.போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் “ஒரு தமிழ் மாணவன்” என்று பொறிக்கச் செய்தார்.

www.surabooks.com

**தமிழ்மொழிச் சிறப்பை உணர்த்தும் கவிதை :**

பைந்தமிழ் பாவலன் பாடும் பைந்தமிழே!
என்றும் இளமை மாறா செந்தமிழே!
வடிதமிழ் மதுரம் ஒழுகிய தீந்தமிழே!
தெள்ளித் தெளிக்கும் தமிழ்க் கடலே!
தெளி தமிழ் தென்னந் தமிழே!
முது சொல் புலவர் தெளித்த பசுந்தமிழே!

தெய்வத்தமிழ் மதுரம் ஒழுகும் கொழி தமிழே!
இலக்கண இலக்கியம் தந்த தமிழே!
இயல் இசை நாடகம் எனும் முத்தமிழே!
நீ வாழி! நின் புகழ் பாட வரம் தா
செந்தமிழே! மதுர கவி தீந்தமிழே!

## சொற்சுவை

**தகப்பன் :** தந்தை என்ற பொருளில் வருவது இச்சொல். தம் அப்பன் = தமப்பன் என்ற வடிவத்தில்தான் முதலில் இருந்தது. இவ்வடிவமே திரிந்து தகப்பன் என்றாயிற்று.

## நிற்க அதற்குத் தக

முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | |
|---|---|
| Aesthetics - அழகியல் (தி.தேர்வு 2022) | Migration - புலம்பெயர்தல் (ஜூன் 2023, மு.திருப்புதல் தேர்வு 2024) |
| Book Review - புத்தக மதிப்புரை (மே 2022) | Art Critic - கலை விமரிசகர் |
| Journalist - இதழாளர் (கா.தேர்வு 2023) | Philosopher - மெய்யியலாளர் |

## அறிவை விரிவு செய்

1. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? – அ.கி. பரந்தாமனார்
2. உயிர்த்தெழும் காலத்துக்காக – சு.வில்வரத்தினம்
3. நவீன கலையின் புதிய எல்லைகள் – இந்திரன்
4. ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் – இன்குலாப்

☆☆☆



www.surabooks.com

www.surabooks.com

இயல் 2

மாமழை போற்றுதும் – இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# இயற்கை வேளாண்மை

உரைநடை உலகம்

**கரு**



✳ மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை.

✳ அதனால் தான் ‘உழவு உலகிற்கு அச்சாணி’ என்று வள்ளுவரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியாரும் போற்றுகின்றனர்.

✳ இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் தீமை விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இந்தப்பாடம்.

## நம்மை அளப்போம் - புத்தக வினாக்கள்

### பலவுள் தெரிக

**2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________** க. தேர்வு 2018, அரை. தேர்வு 2019, மார்ச் 2023, ஜூலை 2024

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை: ஈ) இவை மூன்றும்**

**4. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ________** கா. தேர்வு 2019; ஜூன் 2023, அரை.தேர்வு 2023, 2024, மார்ச் 2024

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ - தவறு, ஆ- சரி

**விடை: i) அ - மட்டும் சரி**

### குறுவினா

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.** அரை.தேர்வு 2018, கா.தேர்வு 2019, 2023 & 2024, மார்ச் 2023, 2025 ஜூலை 2024

(i) தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம் ஆகும்.

(ii) இது ஏழைகளின் கற்பக விருட்சம் ஆகும்.

(iii) இது ஒரு சிறந்த காற்றுத் தடுப்பான் ஆகும். ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது.

(iv) பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர் முதலியன கிடைக்கின்றன. அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

**5. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?**

(i) ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர் மசானபு ஃபுகோகா.

(ii) **ஐந்து வேளாண்மை மந்திரங்கள் :** 1. உழப்படாத நிலம், 2. இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, 3. பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, 4. தண்ணீர் நிறுத்தாத நெல்சாகுபடி, 5. ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்தும் வேளாண்மை மந்திரங்கள் ஆகும்.

### சிறுவினா

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.** அரை.தேர்வு 2024

**வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:** கா.தேர்வு 2019,2023, மார்ச் 2020, 2023, 2025, அரை.தேர்வு 2023

(i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை ‘இயற்கைப் பூச்சிக்கொல்லி’ என்கிறோம்.



enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

(ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.

(iii) வேதிக்கலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும். இதனால் வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.

## நெடுவினா

**1. "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

மார்ச் 2023, கா.தேர்வு 2023 & 2024, மு.திருப்புதல், அரை. தேர்வு 2024

**முன்னுரை:**

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

– என்று வள்ளுவர் குறிப்பிட்டதைப் போல உழவுத் தொழிலால் உணவு உண்டாக்கப்படுகிறது. உணவினால் உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. வேளாண்மையை முறையாக, யாருக்கும் தீங்குத் தராத வகையில் மேற்கொள்வது இயற்கை வேளாண்மையே. அந்த இயற்கை வேளாண்மை முறைகள் சுற்றுச் சூழலையும் வளப்படுத்துகிறது என்பதே உண்மை. அதைப் பற்றிய மேடைப் பேச்சிற்கான உரையை இங்குக் காண்போம்.

**உரை:**

பெரியோர்களே! சான்றோர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் 'உழவு உலகிற்கு அச்சாணி' என்று வள்ளுவரும் போற்றுகிறார்.

இயற்கையிலிருந்து விலகுகிறது இம்மண்ணுலகம். இதனால் இம்மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற இந்நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது. அண்மையில் நம்மை விட்டு மறைந்தாலும்; தமிழர் நெஞ்சில் வாழும் நம்மாழ்வார் ஐயாவின் வழியைப் பின்பற்றி இயற்கை முறையில் வேளாண்மை செய்ய முயன்றால் நம்நாடு நோயில்லா நாடாக மாறும்.

இன்றைக்கு செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி என்று மண்ணை நஞ்சாக்கி அதில் விளையும் பயிர்கள் எல்லாம் பாழ்படுத்தப்படுகின்றன. பூச்சிக்கொல்லி பயிரில் இருக்கும் பூச்சியை மட்டும் கொல்லவில்லை. அதனைச் சாப்பிடுகின்ற மக்களுக்கு அதிகமாக நோய் வருகிறது. புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை இன்னும் என்னென்னவோ சொல்கிறார்கள்.

வேதிக்கலப்பே இல்லாமல் நம் முன்னோர்கள் பயன்படுத்திய வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாவற்றையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊறவைத்து அதைத் தெளித்தால் பூச்சிகள் பயிர்களைத் தாக்காது. காய்ந்த இலைச் சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து போட்டால் போதும். இது புன்செய் நிலத்திற்கு உகந்ததாகும். ஆடு, மாடு முதலிய கால்நடைச் சாணத்தை எரிப்பதனால் கிடைக்கும் சாம்பல் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். உளுந்து நெல்லுக்கு ஊடு பயிராகப் போடுவது! இதை அறுவடை செய்த பின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன் நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும். இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும்.

உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல்சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் என்னும் ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர் **'ஒற்றை வைக்கோல் புரட்சி'** எனும் நூலை எழுதிய **மசானபு ஃபுகோகா.**

**முடிவுரை:**

**ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு.**

அதாவது பலமுறை உழவு செய்வதைக் காட்டிலும் எருவிட்டு வளப்படுத்துதல் சிறந்தது. இவ்விரண்டும் செய்து களையும் எடுத்தபின், பயிரைக் காத்தல், நீர் பாய்ச்சுவதிலும் நல்லதாகும் என்ற வள்ளுவரின் கூற்றுப் போல் இயற்கை வழி விவசாயம் செய்து மண்ணையும், மக்களையும் சுற்றுச் சூழலையும் காப்போம். நன்றி!

## கற்பவை கற்றபின்

**1. மாடித்தோட்டம் அமைக்கும் முறையை இணையத்தளம் மூலம் அறிந்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**ஆசிரியர்** : நேற்றைய வகுப்பில் கூறியபடி யாரெல்லாம் மாடித்தோட்டம் அமைக்கும் முறையை இணையதளத்தில் பார்த்தீர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு படிநிலையைப் பற்றிக் கூறுங்கள்.

**மாணவன் 1** : முதலில் மாடியில் தோட்டம் அமைக்க இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். மொட்டை மாடியில் சூரிய ஒளி நன்றாகப் படும் இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். அதேபோல் நாம் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும்போது அதிகப்படியான நீர் வெளியேறுவதற்கான வடிகால் வசதி உள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

**மாணவன் 2** : இவ்வாறு தேர்வு செய்துவிட்டு அவ்விடத்தில் நீர்க்கசிவு ஏற்படாமல் தடுப்பதற்கு நெகிழியினால் ஆன விரிப்புகளை விரிக்க வேண்டும். அல்லது மாடியில் உள்ள தளத்தில் இரப்பர் கோட் பெயிண்ட் அடிக்க வேண்டும்.

**மாணவன் 3** : அதிக கனம் இல்லாத ஜாடிகள், மண் தொட்டி, மாடித் தோட்டத்திற்கென்றே வடிவமைக்கப்பட்ட நெகிழிப் பைகள், நெகிழித் தொட்டிகள், சுத்தம் செய்யப்பட்ட பெயிண்ட் வாளிகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

**மாணவன் 4** : மாடித் தோட்டம் அமைக்க மண் பயன்படுத்தக்கூடாது. அதற்குப் பதிலாக நல்ல வளமான இடுபொருட்களை இட வேண்டும். மாட்டுச் சாணமும் மக்கிய தேங்காய் நார் கழிவுகளும் இடுபொருள்களாகும். தேங்காய் நார் கழிவு இரண்டு பங்கும், மாட்டுச்சாணம் ஒரு பங்கும், சமையலறை கழிவு ஒரு பங்கும் இட்டுத் தொட்டியை நிரப்ப வேண்டும்.

**மாணவன் 5** : மாடித் தோட்டத்திற்கான காய்கறிகள் வெண்டை, மிளகாய், கத்தரிக்காய், தக்காளி போன்ற செடிக் காய்களும், அவரை, பூசணி, சுரைக்காய், புடலங்காய் போன்ற கொடிக் காய்களும் ஆகும். பழமரங்களான மாதுளை, கொய்யா, போன்றவற்றிற்கு ஏற்றார்போல் நெகிழிப்பை அல்லது டிரம்களைப் பயன்படுத்தலாம்.

**மாணவன் 6** : பூச்செடிகளான மல்லிகை, முல்லை, ரோஜா, சாமந்தி போன்றவற்றையும் மாடித் தோட்டத்தில் வளர்க்கலாம். கீரை வகைகளான கொத்துமல்லி, புதினா, தண்டுக்கீரை, சிறுகீரை, வெந்தயக்கீரை போன்றவைகளும் மாடித் தோட்டத்திற்கு உகந்தவை.

**மாணவன் 7** : முதலில் இடம் தேர்ந்தெடுக்க வேண்டும். மண் பராமரிப்பு, நீர்ப் பாய்ச்சுதல், களை எடுத்தல், சரியான தேவையான உரமிடுதல், பயிர்களைப் பூச்சிகள் அழிக்காதபடிப் பாதுகாத்தல் இவை மாடித் தோட்டம் அமைக்கும் வழி ஆகும்.

**ஆசிரியர்** : நன்று. இப்போது உங்கள் அனைவருக்கும் மாடித் தோட்டம் அமைக்கும் முறைப் பற்றி அறிந்து கொள்ள முடிந்ததல்லவா! நீங்களும் முயற்சி செய்யுங்கள்.

**2. பள்ளியில் செயல்படும் தேசியப் பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றம் ஆகியவற்றின் வாயிலாக மரக்கன்றுகள் நடப்பட்டு வளர்ப்பதில் உங்கள் பங்களிப்பு குறித்து உரை நிகழ்த்துக.**

அனைவருக்கும் வணக்கம்!

நான் பள்ளியில் செயல்படும் தேசியப் பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றம் ஆகியவற்றைப் பற்றியும் அதன் வாயிலாக நான் செய்த செயல்கள் பற்றியும் கூற வந்துள்ளேன்.

தேசியப் பசுமைப்படை என்பது மத்திய அரசால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அமைப்பு. சுற்றுச்சூழல் மன்றம் என்பது மாநில அரசால் கொண்டுவரப்பட்ட அமைப்பு. இவ்விரு அமைப்புகளும் மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும். காய்கறிச் செடிகளை வளர்த்தல், மூலிகைத் தோட்டம் அமைத்தல், காலநிலை மற்றும் இயற்கையின் இன்றியமையாமை பற்றி அறிதல், சுகாதார மேம்பாடு, சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுத்தல், நெகிழிப் பயன்பாடுகளைத் தவிர்த்தல், தூய்மை இந்தியாவை உருவாக்குதல் இவையனைத்தும் இந்த அமைப்புகளின் அடிப்படைச் செயல்பாடுகளாகும்.

எங்கள் பள்ளியில் நானும் எனது நண்பர்களும் மரக்கன்றுகள் நட்டோம். அதனைப் பராமரிக்கும் பணியாய்த் தினமும் தண்ணீர் ஊற்றுவது, காய்கறிச் செடிகளின் இடையே உள்ள களைகளை நீக்குவது போன்றவற்றை நாங்கள் மேற்கொண்டோம். நாங்கள் எங்கள் பகுதியில் சாலையோரங்களில் மரக்கன்றுகளை நட்டோம். நானும் எனது நண்பர்களும் அவரவர்கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள குப்பைகளை அகற்றுதல், மரம் வளர்வதற்கு ஏதுவான இடங்களில் மரங்களை நடுதல், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வீடுவீடாகச் சென்று நெகிழிப் பொருள்கள் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள் பற்றி விளக்குதல், குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டாமல் குப்பைத் தொட்டிகளில் மட்டும் போட வேண்டும் என்று வலியுறுத்தல் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டோம்.